விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை (31.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா. சபை நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளை ஏற்கத் தயார்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளத் தயார் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். பரிந்துரைகளை வரவேற்பதாகத் தெரிவித்ததன்மூலம் சகல பரிந்துரைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் கிடையாது என அவர் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டை முன்னேற்றமடையச்செய்யும் தகுதியை இலங்கை அரசு கொண்டுள்ளது

### அமெரிக்க அரச பேச்சாளர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கையில் உள்ள அனைத்து இனங்களினதும் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு முன்னேற்ற இலக்குகளை அடைவதற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டுமென அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் பிலிப் ஜே குரோவ்லி தெரிவித்தார்.

அத்துடன் உள்நாட்டு யுத்தம் முடிபுற்றதன் பின்வந்த காலப்பகுதியில் இலங்கை அரசாங்கமானது நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்வதற்கான அனைத்துத் தகுதிகளையும் கொண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கஇராஜங்கத் திணைக்களத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் ஐந்து நட்சத்திர விடுதி அமைக்கும் பணி ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூரில் நட்சத்திர விடுதி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

எம்.பி.எஸ்.எல். வங்கியின் அனுசரணையுடன் 400 மில்லியன் ரூபாய் செலவில் 80 அறைகள் கொண்ட உல்லாசப் பயணிகளுக்கான நட்சத்திர விடுதியமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டபோது எழும்பிய அதிர்வு காரணமாக ஹோட்டல் அமைக்கும் பணி கைவிடப்பட்டது.

எனினும் தற்போது அப்பணியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் அடிப்படை வசதிகள், பொருளாதாரத் தேவைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படா (20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களுக்கு ஜே.வி.பி. அழைப்பு

(கொழும்பு)

மாணவர்களின் உரிமைகள் அரசாங்கத்தால் ஒடுக்கப்படுவதற்கு எதிராகவும் இலவசக் கல்வியை பாதுகாப்பதற்கும் ஒன்றிணையுமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மாற்று அபிப்பிராயங்களைக் கொண்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## முதலையிடம் யானை மாட்டிக் கொண்டால்!



ஆபிரிக்கக் காட்டில் யானைக் குட்டியொன்று நீர் அருந்துவதற்காக நீர் நிலையொன்றின் அருகே சென்றபோது அங்கிருந்த முதலையொன்றினால் கௌவிப்பிடிக்கப்பட்ட காட்சியை நீங்கள் காண்கிறீர்கள்.

## பராக் ஒபாமாவுக்கு ஆதரவளிக்க அமெரிக்க தமிழர்கள் தீர்மானம்

### தமிழருக்குத் தீர்வு கிடைக்கும் என நம்பிக்கை



(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என அந்நாட்டில் வாழும் தமிழர்கள் அறிந்துள்ளனர்.

எதிர்வரும் இரண்டாண்டு காலப் பகுதியில் பராக் ஒபாமா இலங்கை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இலங்கைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசை விமர்சிப்போரை கைது செய்ய உத்தரவு?

(கொழும்பு)

அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் விமர்சிப்பவர்களை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு நேற்றைய தினம் இலங்கையின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இரகசிய சுற்றுநிருபம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதல் உள்ளிட்ட இன்னோரென விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் பரவலான அதிருப்தி வளர்ந்து வருகின்றது.

எதிர்வரும் காலத்தில் பொதுமக்கள் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் அணி திரளக் கூடும் என்றும் அண்மையில் புலனாய்வு அமைப்புகள் ஜனாதிபதி செயலகத்துக்கு சமர்ப்பித்திருந்த இரகசிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தன. இந் நிலையிலேயே இந்த இரகசியசுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

அவ்வாறு கைது செய்யப்படுபவர்களை பொது இடத்தில் அநாகரிகமாக நடந்தமை, பொது இடங்களில் குடிபோதையில் காணப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீதிமன்றுக்கு ஆஜர் செய்து தண்டனை பெற்றுக்கொடுக்குமாறும் சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் குறித்த சுற்றுநிருபம் மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (எ-1)

## வடக்கில் காணி உறுதிகள் அழிப்பு; பாதுகாப்பு அமைச்சு விசாரிக்கும்!

(கொழும்பு)

வடக்கு காணியுறுதிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் அழித்துள்ளதாக திவயின சிங்களப் பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களின் காணி அலுவலகங்களில் காணப்பட்ட தரவுகளை புலிகள் அழித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் காணியுறுதிகள் அழிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் அப்போது குறித்த (20ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

# காணாமற் போனோருக்கு இறப்பு அத்தாட்சிப்பத்திரம்

## பொது நிர்வாக அமைச்சு தகவல்

(கொழும்பு)

காணாமற்போய் ஒரு வருடத்திற்கு மேலாக உயிர் வாழ்வதான எந்தத் தகவலும் இல்லாதவர்கள் அனைவரும் மரணமடைந்ததாகக் கருதி இறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு தெரிவிக்கின்றது.

அது தொடர்பான விசேட சட்ட மூலம் ஒன்று எதிர்வரும் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது.

காணாமற் போனவர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியாக முகம்கொடுக்க நேர்ந்துள்ள அழுத்தங்களைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் இவ்வாறானதொரு தீர்மானத்துக்கு வந்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகளைத் தேடித் தருமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புக் கூட்டங்களையும் நடத்திவரும் நிலையில் இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை அனைத்து தரப்பினரதும் வாயை அடைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பிரஸ்தாப தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ச-5)

# கட்டடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் உடுவில் பிரதேசத்திற்கான அலுவலக கட்டிடத்திறப்பு விழா இன்று மாலை 4.00 மணிக்கு உடுவில் பிரிவுத் தலைவர் சிறீகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிராந்தியத் தலைவர் வீ.கே.கணேசலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.





## விற்பனைக்கு

ABL Chaina ஹண்டர் 2010 Model விற்பனைக் குண்டு.

தொடர்புக்கு :-

0777498793

(2770)

## வேலை ஆட்கள் தேவை

ரயர் கடைக்கு வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை.

தொடர்பு :-

P.K.S.P. ரயர் அன் வேர்க் சொப்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

T.P :- 0777498793

(2770)

## தேவை

பகுதி நேரமாக கணனி கற்பிப்பதற்கு பெண் ஆசிரியை தேவை. நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு :-

0773437065

(2779)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :-

0770452612

(2775)

## தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)


# வல்லிபுரத்தில் நேற்று வயோதிபரின் சடலம் மீட்பு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அருகிலுள்ள வயல் வெளியில் நேற்றுக் காலை 6.00 மணியளவில் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 6.00 மணியளவில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது வயலை பார்வையிடுவதற்காகசென்ற போது வயல் பக்கமாக துர்நாற்றம் வீசியதை அடுத்து சடலம் ஒன்று அழுகிய நிலையில் காணப்படுவதை அவதானித்துள்ளார்.

உடனடியாக பருத்தித்துறை பொலிசாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சடலம் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. இச்சடலம் சுமார் 75 வயது மதிக்கத்தக்க ஒருவருடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-24)


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்

## நிறுவுனர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் - 2010

116 ஆவது ஆண்டு

காலம் : 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம் : ஒறேற்றர் மண்டபம்

தலைமை : திரு. ஆறு.திருமுருகன் அவர்கள் (அதிபர்)

**முதன்மை விருந்தினர்**

ஸ்கந்தவரோதயன் - DR.W.E. வோசிங்ரன் திசேரா அவர்கள்
(St MARY'S NURSING HOME & DESPENSARY CHILLAW)

**சிறப்பு விருந்தினர்**

ஸ்கந்தவரோதயன் - திரு. K. பாலசுப்பிரமணியம் அவர்கள்
(கணக்காளர்) (தலைவர் - ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம், அமெரிக்கா)

**கௌரவ விருந்தினர்**

திரு.செ.குபேரநாதன் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

**ஆசியுரை**

சிற்பி சிவ.சரவணபவன் அவர்கள்
(ஆசிரியர் இந்துசாதனம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

கந்தரோடை
021 225 0230

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(2780)


# மரண அறிவித்தல்

## கோவிந்தர் ஆறுமுகம் கந்தசாமி

**ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்றப் பதிவாளர், அகில இலங்கை சமாதான நீதவான், (SWORN TRANSLATOR - DISTRICT COURT - JAFFNA) அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர் - மாவட்ட மன்று - யாழ்ப்பாணம்**



வி.எம். றோட் புலோலி மத்தி பருத்தித்துறையைச் சேர்ந்த கோவிந்தர் ஆறுமுகம் கந்தசாமி 30.10.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தர் ஆறுமுகம் - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு கணபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பத்மநாயகி ஆகியோரின் சகோதரனும் தனலக்குமி, கமலக்கண்ணன் (பொறியியலாளர் - டுபாய்) கானசரஸ்வதி, கந்தவேள் (லண்டன்), காலஞ்சென்ற முருகவேள், இரத்தினசபேசர், (பொறியியலாளர் - டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமகுரு, மதிவதனா, சபாரத்தினம், சாருமதி (லண்டன்), கௌரி (டுபாய்), சிவசண்முகமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் சீதாதேவி, பார்வதிதேவி, சுப்பிரமணியம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற மயில்வாகனம், இலக்குமிதேவி, ருக்மணிதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சதாசிவம், கந்தசாமி, இராசரத்தினம், பத்மநாதன் ஆகியோரின் சகலனும் மணிவண்ணன் (பொறியியலாளர் - டுபாய்) தமிழ்ச்செல்வி, ரவிவண்ணன், கமலவதனி, கலைவாணி (மருத்துவபீடம் - கொழும்பு) கமலவாசன், கலைச்செல்வி, கார்த்திகேயன், பைரவி, அபிநயா, வைஷ்ணவி, இந்துமதி (டுபாய்), பிரசாந் (திருகோணமலை) ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.11.2010) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9.00 மணிக்கு தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வி.எம்.றோட்,
புலோலி மத்தி,
பருத்தித்துறை.

தகவல் : மனைவி கமலாம்பிகை
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/1527)

# கரவெட்டி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தைப் பேணுமாறு அறிவுறுத்தல்

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு பிரதேசசபைச் செயலர் கே. குலநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசங்களில் உள்ள முக்கிய இடங்களான மக்கள் கூடும் சந்தைகள், பஸ்நிலையங்கள் , கடைத் தொகுதிகள் போன்றவற்றில் கழிவுப் பொருட்களை சேகரிக்கும் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.எனவே கழிவுப் பொருட்களை குப்பைத் தொட்டியில் போடுமாறும் வீடுகளுக்கு முன் வீட்டுக்கழிவுப் பொருட்களை சேகரித்து வைக்கும் போது பிரதேச சபையின் உழவு இயந்திரம் மூலம் தினமும் கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்ல இலகுவாக இருக்கும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

அதிகமான மக்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாமையினால் தொற்று நோய்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளை தடுக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளதுடன் எமது பிரதேசம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-24)

# சூழல் பாதுகாப்புக்கு எதிரான சம்பவங்களை உடன் அறிவிக்குமாறு கோரிக்கை

(கரவெட்டி)

சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவினர் வடமராட்சி பிரதேசங்களில் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளதாக சூழல் பாதுகாப்பு பரிசோதக தலைமை அதிகாரி யு. நிசாந்த தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் உள்ள மூன்று பொலிஸ் பிரிவுகளான பருத்தித்துறை, நெல்லியடி , வல்வெட்டித்துறை பிரிவுகளில் இடம்பெறும் சூழல் பாதுகாப்புக்களை கண்காணித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதில் முக்கியமாக சட்ட விரோதமான கசிப்பு, மரங்களை வெட்டி ஏற்றுதல் , மணல் அகழ்வு போன்ற சம்பங்களை தடுத்து வருவதுடன் கலாசாரச் சீரழிவு, சிறுவர் திருமணம் , சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் , வீதிகளில் பகிடிவதைகள் போன்ற செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே வடமராட்சி பிரதேசங்களில் இடம்பெறுகின்ற சூழல் பாதுகாப்புக்கு எதிரான சம்பவங்கங்களை உடன் இக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கும் போது அதற்கான நடவடிக்கைகளை தாம் மேற் கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-24)

# இளைஞர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(சில்லாலை)

இதம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை இன்று காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "மது ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு செயற்றிட்டம் , நெருக்கீட்டு முகாமைத்துவம்" எனும் தலைப்புகளில் போரூட் நிறுவன வளவாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர் என இதம் நிறுவன இணைப்பாளர் த. சயந்தன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-58)

# முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் அருள் அமுதம் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு சைவ சமய அருள் நெறி மன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் அருள் அமுதம் மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கோப்பாய் வீரபத்திர கோவிலடியில் சைவ சமய அருள் நெறி மன்றத் தலைவர் சிவ ஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் , சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மிலாசினி அப்புத்துரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

வரவேற்புரையை சைவப் புலவர் செ. கந்தசத்தியதாசன் நிகழ்த்த , ஆசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றுவர்.

அத்துடன் "அருள் அமுதம்" நூல் வெளியீட்டு விழாவின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா. வேதநாதன் நிகழ்த்துவார். நூலின் முதற்பிரதியை கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய கோட்ட தொண்டுநாதன் சுவாமிகள் (ஹவாய் ஆதீனம்) பெற்றுக் கொள்வார்.

மேலும் பேராளர் கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*31.10.2010*

*(ஐப்பசி 14 , ஞாயிற்றுக்கிழமை)*

*நவமி பின்னிரவு 12.19 மணிவரை*

*ஆயிலியம் முன்னிரவு 9.03 மணிவரை*

*இராகுகாலம் 4.33- 6.03 மணிவரை*

*சுபநேரம் 9.03-10.33 மணிவரை*

**மேடம்** பெற்றோர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், கொடுக்கல், வாங்கல்கள் சுமுகமாக இருக்கும், சொத்து வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும்,வாகன சுகமுண்டு.

**இடபம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு,தொழில் போட்டிகள் மாறும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிட்டும், சகோதரர் வழியில் அனுகூலமுண்டு.

**மிதுனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், நண்பர்களால் சந்தோசம் கிட்டும், திருமண முயற்சி வெற்றி பெறும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளைச் கடைப்பிடிக்க வேண்டிய நாள், பிள்ளைகளால்சிறு விரயம் ஏற்படலாம்,உங்களைப் பற்றி விமர்சிப்பவர்களிடம் எதிர்த்து பேசாமல் இருப்பீர்கள்.

**சிங்கம்** வரவைக்காட்டிலும் செலவு இருமடங்காகும்,குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களில் விழிப்புணர்ச்சி தேவை, பெரியோர் ஒத்துழைப்பு வழங்குவர்.

**கன்னி** பொது வாழ்வில் மதிப்பும்,மரியாதையும் அதிகரிக்கும்,இல்லம் தேடி இனிய செய்தி வந்து சேரும்,தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்,பொருளாதார நிலை சுமுகமாக காணப்படும், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகளில் ஈடுபாடு அதிகரிக்கும், விருந்தினர் வருகையுண்டு, தந்தை வழி தனலாபம் கிட்டும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது,வரவு வருவதற்கு முன்னே செலவுகள் அதிகரிக்கும், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை, பிரயாண பயமுண்டு.

**மகரம்** இறை வழிபாட்டால் இனிமை சேரும் நாள், வாக்குறுதியைக் கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிட்டும், குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுப்பது நல்லது.

**கும்பம்** தெய்வீகச் சிந்தனை மேலோங்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம், கடன் சுமை குறைய புதிய உத்திகளைக் கையாள்வீர்கள், உறவினர் வழி நன்மையுண்டு.

**மீனம்** ஆலய வழிபாட்டில் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று கைகூடலாம்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நேர்ப்பாதை

"தம்பி இங்கே வா! வந்து வரிசையில் நில்"

"சேர், அது வந்து..."

"என்னப்பா,வந்து...போய்...என்று சொல்லிக் கொண்டு... நாங்களெல்லாம் உனக்கு மனிதர்களாகத் தெரியவில்லையா? உனக்கு மட்டும் அவசரமா?"

"சேர்,படம் ஆரம்பித்து விடுவார்கள். அதனால்..."

"எங்களுக்கு மட்டும் படம் பார்க்க வேண்டுமென்ற ஆசை இல்லையா... வந்து இப்படி நில். நாமெல்லாம் மனிதர்கள். நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும். எறும்பைப் பார்த்திருக்கிறாயா? அது எவ்வளவு அழகாக ஒன்றுக்குப் பின் ஒன்றாக வரிசையாகச் செல்கிறது."

"அதைப்பற்றி நான் கூட கொஞ்சம் படித்திருக்கி றேன்"

"என்ன படித்திருக்கிறாய்?"

"உணவு இருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பதற்காக எறும்புப் புற்றிலிருந்து முதலில் சில 'ஸ்கவுட்' எறும்புகள் வெளியில் கிளம்புமாம். போகும்பாதை யில் 'பெரோமோன்' என்ற இரசாயனப் பொருளை வெளியிட்டுக் கொண்டே போகுமாம். அந்த அடையாளத்தை வைத்தே திரும்பி வந்து விடுமாம். எல்லா எறும்புகளுக்கும் போக வர அதுதான் தடம். எறும்புகள் திருப்பங்கள் உள்ள பாதையை விரும்புவதில்லை. நேர்ப்பாதையைத் தான் விரும்பும். திருப்பம் உள்ள பாதையை விலக்கி விடுவதால் எறும்புகள் தேர்ந்தெடுக்கும் பாதை நேராகவும்- குறைந்த தூரம் உள்ளதாகவும் அமைந்து விடுகிறது. அதனால்தான் எறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாகப் போகிறது"

"எறும்பைப்பற்றி இவ்வளவு தூரம் படித்திருக்கி றாயே. ஆனால் நாம் எப்படி நடந்து கொள்வது என்று தெரியவில்லையே"

"அதுவந்து..."




"அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே... இதோட ஏழெட்டு தடவை முந்தி முந்திக் கொண்டு முன்னால் போகப் பார்த்தாய். எல்லோரும் சேர்ந்து உன்னை இழுத்துக் கொண்டு வந்து இங்கே விட்டுவிட்டுக் போகிறார்கள். இப்படியே குழப்பம் பண்ணிக் கொண்டிருந்தால் யாருமே ஒழுங்காக டிக்கெட் வாங்க முடியாது"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 80 |
| தக்காளி | 120 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 50 | 70 |
| கரட் | 80 | 80 | 60 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 70 | 50 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 120 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 |
| கரணைக்கிழங்கு | 60 | 50 | 70 |
| பயிற்றங்காய் | 100 | 80 | 140 |
| லீக்ஸ் | 120 | 100 | 130 |
| பீற்றூட் | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 130 |
| போஞ்சி | 130 | 100 | 150 |
| கத்தரி தம்புள்ள | 90 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 25 |
| தேசிக்காய் | 140 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |




யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் உரையாற்றுவதையும் வணபிதா றோமன் நேசராஜா, யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வசந்திமாலா சிவபாலன் ஆகியோர் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## வடமராட்சியில் வெவ்வேறு விபத்து சம்பவங்களில் மூவர் படுகாயம்

வடமராட்சியில் வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் மூன்று பேர் படுகாயம் அடைந்து மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக தெரியவருவதாவது,

கடந்த வியாழக்கிழமை உடுத்துறை, தாளையடிப் பகுதியில் உள்ள பாலம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பருத்தித்துறை இன்பர்சிட்டியைச் சேர்ந்த அண்ணாத்துரை றோசன் (வயது-20) என்ற இளைஞர் கையிலும் காலிலும் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவனான பருத்தித்துறையைச் சேர்ந்த சதீஸ்குமார் பிரசாந் (வயது 16)என்ற மாணவன் போட்டியின் போது தவறி விழுந்தநிலையில் பலத்த உட்காயங்களுடன் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

அத்துடன் பருத்தித்துறை முதலாம் கட்டைப் பகுதியில் வீடொன்றில் மேசன் வேலை செய்து கொண்டிருந்தபோது உயரத்தில் இருந்த சிலாகை தவறி தலை மேல் விழுந்ததில் கட்டைக்காடு, முள்ளியான் பகுதியைச் சேர்ந்த அருமைநாதன் அன்ரனி லோகநாதன் (வயது 47) என்ற குடும்பஸ்தரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-47)

# மாணவர்கள் மீதான அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று காலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

12பேர் அடங்கிய மாணவர் தூதுக் குழுவினருடனான சந்திப்பில் மனோ கணேசனுடன் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ராஜேந்திரனும், மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதனும் கலந்து கொண்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மீது அரசாங்கத்தினால் நடத்தப்படும் அடக்குமுறை, ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரட்ண நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமை, தற்சமயம் 30 மாணவர்கள் வரை கைது செய்யப்பட்டுள்ளமை , சுமார் 200 பேர்வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளமை மற்றும் ஒன்றியத்தின் நிலைப்பாடுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு நேரடி விளக்கமளித்து ஆதரவு கோரும் கலந்துரையாடல் வரிசையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளிடம் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறுகையில்,

மாணவர்கள் மீதான அடக்குமுறைகளையும், உதுல் பிரேமரட்ண கைதையும் நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இது தொடர்பில் மாணவர் அமைப்புக்களுடனும், ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து செயற்படுவதற்கு எமது கட்சி தயாராக இருக்கின்றது.


இந்த அரச அடக்குமுறை தமிழ்மாணவர்களையும் தமிழ் மக்களையும் பொறுத்தவரையில் புதியவை அல்ல. இன்றைய அரசாங்கத்தின் ஆட்சியில் கடந்த 5வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்லைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

உங்களது புள்ளிவிபரங்களில் இடம் பெற்றுள்ள எண்ணிக்கைகளை விட பெருந்தொகையான தமிழ் மாணவர்கள் சிறைக் கூடங்களில் நீண்டகாலமாக வாடுகிறார்கள்.

இன்னும் பெருந்தொகையான தமிழ் மாணவர்கள் தமது பல்கலைக் கழகங்களுக்கு செல்லமுடியாதுள்ளார்கள். இதை விட தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அத்துடன் யுத்தத்தினால் சகல விதமான கல்வி வளங்களையும் இழந்துள்ளார்கள்.

எமது மாணவர்கள் துன்புறும் பொழுது தென்னிலங்கையில் இருந்து உங்களது அமைப்புகள் உட்பட அரசியல் கட்சிகள் மத்தியில் இருந்து எமது மாணவர் போராட்டங்களுக்கு ஆதரவுக் குரல் எழுப்பவில்லை.

எமது மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக எனது



தலைமையில், இங்கே தென்னிலங்கையில் நடத்தப்பட்ட பேராட்டங்கள் கொச்சைப்படுத்தப்பட்டன.

இன்று உங்களுக்கு ஆதரவு வழங்கும் சில கட்சிகள் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு என்னையும் எமது கட்சியையும் புலிகள் என்றும், பிரிவினைவாதிகள் என்றும் வசைபாடினார்கள்.

ஆனால் இவற்றை மனதில் வைத்துக்கொண்டு நாங்கள் இன்று உங்களை உதாசீனப்படுத்தவில்லை என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். கடந்த காலங்களில் சிங்கள தரப்பிலும் தமிழ் தரப்பிலும் தவறுகள் நிகழ்ந்துள்ளன. இவை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

எமது கட்சியை பொறுத்தவரையில் அன்றும், இன்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயற்படுகின்றோம். தமிழர்களுக்கு, சிங்களவர்களுக்கு , முஸ்லிம்களுக்கு என தனிதனி வழிகள் இன்று இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஒட்டுமொத்தமான அடக்குமுறைக்கு எதிராக அனைத்து இனத்தவரும் இணைந்து கொள்ளும் ஒட்டுமொத் தமான போராட்டத்தில் எமது கட்சி இணைந்துகொண்டுள்ளது. அதேபோல் உங்களது போராட்டங்களில் தமிழ் மாணவர்களதும், தமிழ் மக்களினதும் உணர்வுகளையும் இணைத்துக்கொள்ளுங்கள். இதற்கு பலமாக செயற்படுவதற்கு நாம் தயார் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## செயன்முறைப் பரீட்சைகளில் தோற்றும் தனியார் பரீட்சார்த்திகளுக்கு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளில் தோற்றும் தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் இதுவரை கிடைக்காத பரீட்சார்த்திகள் இது குறித்துத் தமக்கு அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

செயன்முறைப் பரீட்சைகளில் தோற்றாத பரீட்சார்த்திகளுக்கு க.பொ.த. பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டாதெனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க குறிப்பிட்டார்.

டிசம்பர் மாதப் பாடசாலை விடுமுறைக்கு முன்னர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுமென ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்படல் வேண்டும்

## நல்லிணக்க ஆணைக்குழுவில் பேராயர் டுலிப் டி சிக்கேரா சாட்சியம்

இனங்களுக்கிடையில் சிறந்த நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படவேண்டும். அதிகாரப் பரவலாக்கத்துடன் இந்தத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். அதேவேளை வெளிமாவட்டங்களில் உள்ளவர்களை அரச அனுசரணையுடன் வடக்கு கிழக்கில் குடியேற்றம் செய்யக்கூடாது. கடந்தகால நெருக்கடிகளுக்கு இதுவே காரணமாகும். எனவே அதனை மறுபடியும் செய்ய முனையக்கூடாது. அத்தோடு யுத்தம் முடிபடைந்த நிலையில் வடக்கு கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னம் படிப்படியாக குறைக்கப்பட வேண்டும். அத்துடன் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அங்கலிக்கன் திருச்சபையின் கொழும்புப் பேராயர் டுலிப் டி சிக்கேரா தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வாணைக்குழுவின் விசாரணை அமர்வு அதன் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நடைபெற்றது. ஆணைக்குழுவின் தலைவருடன் ஐந்து உறுப்பினர்கள் ஆணைக்குழு சார்பில் கலந்து கொண்டனர்.

ஆயர் டுலிப் டி சிக்கேரா அங்கு மேலும் சாட்சியமளிக்கையில், யுத்தம் முடிந்து விட்டது. நாம் தற்போது யுத்தத்துக்கு பின்னரான நிலைமையில் இருக்கிறோம். இராணுவ தீர்வு என்பது தற்போது அனைத்து விடயங்களுக்கு தீர்வாக அமையாது. எனவே தற்போது பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் படிப்படியாக வன்னியில் இராணுவ பிரசன்னம் குறைவடைய வேண்டும்.

சில இடங்களில் இராணுவம் இருக்கலாம். இது தேவையானது. ஆனால் வடக்கில் முழுமையாக சிவில் நிர்வாகம் அமுலுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இனங்களுக்கிடையில் சிறந்த நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கத்துடன் இந்தத் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

கடந்த செப்டெம்பர் மாதம் நான் வன்னிக்குச் சென்றேன். அங்கு இராணுவ முகாம் பெயர்ப்பலகை சிங்கள மொழியில் இருந்தது. ஆனால் அங்கு தமிழ் மக்களே அதிகளவில் உள்ளனர்.

தற்போது பொலிஸ் துறைக்கு தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்கள் இணைக்க முயற்சிக்கப்படுவதாக தெரிகிறது. அதாவது பொலிஸ் சேவையில் தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறு இடம்பெற வேண்டும். அப்போதுதான் நம்பிக்கை உருவாகும்

இடம்பெயர்ந்த மக்கள் மிக விரைவில் மீள் குடியேற்றப்பட வேண்டும். இவர்கள் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட வேண்டும். காணிப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் விடயத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் சமூகத்தில் மதிப்புடன் வாழ்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதேவேளை நீண்டகாலம் சிறைகளில் இருக்கின்ற கைதிகள் தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்கள் விடுவிக்கப்படலாம். மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிடலாம். அதாவது கடந்தகால காயங்கள் ஆற்றப்பட வேண்டும். இது தொடர்பில் விரைவான நடவடிக்கை அவசியமாகும்.

புனர்வாழ்வு புனரமைப்புகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அவை நம்பிக்கையூட்டுபவையாக அமைய வேண்டும். அதாவது புனரமைப்புகள் முதலீடாக அமையலாம். அப்போது முழு நாடும் பயன்பெறும். வடக்கு கிழக்கில் புனரமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது அப்பிரதேச மக்களின் ஆலோசனைகள் கேட்கப்பட வேண்டியது அவசியம். அப்பிரதேச மக்களுக்கே இதன் போது தொழில் வாய்ப்புக்களை வழங்க வேண்டும். அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு புனரமைப்பு பணிகளில் ஈடுபட அனுமதி வழங்கப்பட வேண்டும். தென்னிந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதி மக்களில் இலங்கை திரும்ப விரும்புபவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

கடத்தல்கள் தொடர்கின்றன. வன்னியிலும் குடாநாட்டிலும் தற்போது கடத்தல்கள், வன்முறைகள் இடம்பெறுவதாக அறிகின்றோம். இது தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படுவது அவசியமாகும். கடத்தல்கள் மற்றும் வன்முறைகள் தடுக்கப்படவேண்டும். சில ஆயுதக் குழுக்கள் இருப்பதாக தெரிகின்றது. இது தொடர்பில் அவதானம் தேவையாகும். சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுவது முக்கியம்.

இதேவேளை வடக்கு கிழக்கில் அரச அனுசரணையுடனான குடியேற்றங்கள் இடம்பெறக்கூடாது. அதாவது வெளி மாவட்டங்களிலிருந்து அங்கு குடியேற்றப்படக்கூடாது கடந்த காலங்களில் இதுபோன்ற விடயங்களே பிரச்சினைக்கு காரணமாக அமைந்தன.

அதனை மீண்டும் செய்யக்கூடாது யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் படிப்படியாக குறைக்கப்பட வேண்டும். சிவில் நிர்வாகமே தேவையாகும். இராணுவ வீரர்கள் தங்கள் குடும்பங்களுடன் அங்கு குடியேற்றப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது குறுக்கிட்ட ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா வடக்கில் இராணுவ வீரர்கள் தங்கள் குடும்பங்களுடன் அங்கு குடியேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுவது தவறான தகவல் என்று பாதுகாப்பு செயலாளர் கூறியதாக குறிப்பிட்டார். பாதுகாப்பு செயலாளரிடம் தாங்கள் இந்த கேள்வியை கேட்டதாகவும் அவர் அதனை மறுத்ததாகவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

டுலிப் டி சிக்கேரா தொடர்ந்து சாட்சியமளிக்கையில், எனவே சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சிவில் நிர்வாகம் திறனின்றி இருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் மனித உரிமைகள் மொழி விடயங்கள் என்பன பேணப்பட வேண்டும். சுயாதீனமான அரச சேவை மற்றும் கட்சி அரசியல் என்பன துரிதப்படுத்தப்படுவது அவசியமாகும். மேலும் அவசரகாலச் சட்ட விதிகள் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் என்பன மீள் பரிசீலனை செய்யப்பட்ட வேண்டும் . இவை சமூகங்கள் வழமைக்கு திரும்புவதற்கு இடையூறாக அமையலாம்.

மேலும் இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும். இந்த விடயத்தில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். நாட்டுக்கு ஒருமைப்பாடு தொடர்பான கல்வி அவசரமாக தேவைப்படுகின்றது. தமிழ், சிங்கள மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சமூகங்கள் மதங்கள் அரசியல் கட்சிகள் என்பன சுயவிமர்சனத்துக்கு உட்பட வேண்டியது அவசியமாகும். (ஸ்ரீ-2)




மாபெரும் மலிவு விற்பனை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க



11.10.2010 முதல் 05.11.2010 வரை

சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்று (31.10.2010) ஞாயிற்றுக்கிழமையும் ஸ்தாபனம் திறந்திருக்கும்.

லைடன் புடவை நிலையம்

இல.40, ஆஸ்பத்திரி வீதி,(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(சி-1382) தொலை பேசி :- 021 222 2381



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் -18.08.1956

மறைவு -19.09.2010

அமரர் சந்திரசேகரம் பவானிதேவி

கள்ளமில்லாச் சிரிப்பால் – எம்மை
செம்மை செய்துவிட்டு
கண்ணிமைக்கும் வேளைதனில் – எமை
பரிதவிக்க விட்டதேனோ?
மீண்டும் உம் சிரிப்பைக்காண – நீர்
வருவீரோ மனக் குறைதீர்க்க
சிரித்துப்பேசி எம்மேல்
அன்பை பொழிந்தீரே
மீண்டும் அந்த அன்பு
எம்மில் நிலைக்க செய்வீரோ?

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

[2777]

குடும்பத்தினர்.





வர்த்தக முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் கடந்த 28ஆம் திகதி வட மாகாண ஆளுநர் தலைமையில் வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்றது. இதன் பின் முதலீட்டாளர்கள் ஓமந்தைப்பிரதேசத்திற்கு நேரடியாக சென்று இடங்களைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

# சீனாவின் அதிவேக கணனி அறிமுகம்

உலகின் அதிவேக சுப்பர் கணனியை (Super Computer) கொண்ட நாடு என்ற பெருமையை சீனா நேற்று முன்தினம் பெற்றுக்கொண்டது.

டியானி (Tianhe)-1A என அழைக்கப் படும் கணனியே அது. இதன் வேகம் 2.507 பீடாபுலொப்ஸ் (Tetaflops).அதாவது ஒரு செக்கனில் 2,507ட்ரில்லியன் கணிப்புக் களை மேற்கொள்ளக்கூடியதாகும்.

இது மற்றைய சுப்பர் கணனிகளைவிட 43 வீதம் வேகம் கூடியது. இக்கணனியா னது சீன தேசிய பாதுகாப்புத் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினாலேயே (National University of Defence Technology (NUDT) உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான மொத்த செலவு 88 மில்லி யன் அமெரிக்க டொலர்கள். சுமார் 200 பொறி யியலாளர்களால் 2 வருட கடும் உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்டது. இது இயங்குவதற்கு மொத்தமாக 4.04 மெகா வோற்ஸ் மின்சாரம் தேவைப்படுகின்றது.

இக்கணனி 14 ஆயிரத்து 336 இண் டெல்லியோன் சிபியுக்கள் ( CPU) மற்றும் 7ஆயிரத்து 168 Nvidia tesla m 2050 ஜி.பி. யுக்களை யும் ( GPU -Graphics Processing Unit) கொண் டுள்ளது. முதன் முறையாக கடந்த 2009ஆம் ஆண்டு இக் கணனி உருவாக்கப்பட்டது. அதன்போது இது உலகின் 5ஆவது வேக கணனி என்ற பெரு மையை மட்டுமே கொண்டிருந்தது.

ஆனால் தற்போது இது நன்கு மேம்படுத் தப்பட்டதையடுத்து உலகின் அதிவேக கணனி என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இது வரை அமெரிக்காவின் கிரேஸி எக்ஸ்.டி 5 ஜகுவார் Cray x T5 Jaguar உலகின் அதி வேக சுப்பர் கணனியாக இருந்து வந்தது. இது 224.162 ஒப்டெரொன் (Opteroncpus) சிபியுக் களைக் கொண்டது. இதன் வேகம் 1.75 பீடாபுலொப்ஸ் (Tetaflops). ஆகும். எனினும் சீனா அதனை டியானி (Tianhe)-1A மூலம் முறியடித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# வன்னி மாவட்ட அபிவிருத்தி குறித்து ஆளுநர் தலைமையில் ஆராய்வு

(பருத்தித்துறை)

வன்னி மாவட்டத்தின் அபிவிருத்தி சம்பந்தமான முக்கிய கூட்டம் நேற்று சனிக் கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக கேட் போர் மண்டபத்தில் வடக்குமாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலை மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு , கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த திணைக்கள தலை வர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஒப்பந்தகாரர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்டத்தில் அடுத்து வரும் மாதங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வீதிகள், குளங்கள் , கட்டடங் கள் அபிவிருத்தி செய்யப்பட இருப்பதை அடுத்து அதற்கு முன்னோடியாக இக்கூட்டம் நடைபெற்றது.

ஆளுநருடன் வடக்கு மாகாண சபை அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண் டனர்.

ஒப்பந்தகாரர்களின் அபிப்பிராயங்க ளையும் ஆளுநர் இதன் போது கேட்டறிந்து கொண்டார்.

(ஸ்ரீ-10)


# வட மாகாணம்

## வட மாகாண தலைமைச் செயலக அலுவலகங்களுக்கான கட்டடத் தேவை

வடமாகாண சபை தலைமைச் செயலகமும் அதன் கீழுள்ள திணைக்களங் களும் 2010 ஜனவரி 1 தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கவுள்ளன. யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து 15 நிமிட நேரத்தினுள் பயணிக்கக் கூடியதாக அமைந்துள்ள கட்டடங்கள் தேவையாகவுள்ளன. இக்கட்டடங்களின் தள விஸ்தீர ணம் இரு வகையில் தேவைப்படுகிறது.

1. 3000 சதுர அடிக்கு மேற்பட்டது
2. 1500 – 3000 சதுர அடிக்குட்பட்டது

வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய கட்டடங்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும். கட்டடங்களை வழங்க விரும்பும் கட்டட சொந்தக்காரர்கள் தங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் பற்றிய பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக முழு விபரங்களையும் பிராந்திய ஆணையாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலகம், இல:48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 222 2643) என்னும் முகவரிக்கு 08 நவம்பர் 2010ஆந் திகதிக்கு முன்பதாக அறியத்தரவும்.

1. கட்டடத்தின் பெயரும் அமைந்துள்ள இடத்தின் முகவரியும்
2. கட்டட சொந்தக்காரரின் பெயரும் முகவரியும்
3. கட்டடத்தின் தள விஸ்தீரணம்
4. கிடைக்கக்கூடிய வசதிகள்

ஆ.சிவசுவாமி,
பிரதம செயலாளர்,
வடமாகாணம்.
30.10.2010 (சி/1524)


# மாற்றுத்திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரி விற்குட்பட்ட (ஆனைக்கோட்டை, சாவல்க் கட்டு,காக்கைதீவு,நவாலி) மாற்றுத்திறனாளர் களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை நவாலி (YMCA) மண்டபத்தில் நடை பெற வுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் சண்டிலிப் பாய்ப் பிரதேச செயலக சமூக சேவை உத்தி யோகத்தர், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங் கத்தின் உத்தியோகத்தர்கள், ஜெய்ப்பூர் நிறு வன நிகழ்ச்சித்திட்ட அலுவலர் குழாம் ஆகியோர்கள் கலந்து தமது நிறுவன செயற் பாடுகள் தொடர்பாகவும் தமது நிறுவனத்தி னூ டாக இவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பாகவும் கருத்துரைக்கவுள் ளனர்.

இந் நிகழ்வின் போது மாற்றுத் திறனா ளர்களது தேவைகள், மருத்துவச் சிகிச்சை தொடர்பாகவும், அவர்களின் உளவிருத்தி தொடர்பாகவும், சமூக சேவை திணைக்களத் தின் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையா டப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரிவு ஆற்றுப்படுத்துனர் கி.றேகன் தெரிவித்துள் ளார்.

(ஸ்ரீ)


# போதைப் பொருட்கள் விற்பனை செய்த 13 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

புத்தளத்தில் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த மற்றும் விற்பனை செய்த 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மூன்று இடங்களில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் வேட்டையின் போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

போதைப் பொருள் வர்த்தகத்தை கட்டுப் படுத்தும் நோக்கில் பொலிஸார் நாடு தழுவிய ரீதியில் மேற்கொண்டு வரும் தேடுதல் நட வடிக்கையின் ஓர் கட்டமாக இந்தத் தேடுதல் வேட்டை அமையப் பெற்றதாகவும் குறித்த நபர்களிடமிருந்து 725 பக்கெட் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து புத்தளத்திற்கு ஹெரோ யின் போதைப் பொருளை கடத்தும் நபர்கள் இருவர் இந்தக் கும்பலில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்குவதையும் அருகில் அதிபர் திருமதி இதய சிவதாஸ் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்க வேண்டும்

அவங்களே கலைக்கும் வரை தடை இருக்கணும்!

புலி ஆதரவு என்றால் எப்படி வைகோ பேர் ஒலிக்குமோ... அப்படி'எதிர்ப்பு' களத்தில் எப்போதுமே ஒலிக்கும் பெயர் சுப்பிரமணியசுவாமி!

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீட்டிக்கலாமா... வேண்டாமா என்பது குறித்த விசாரணை

"புலிகள் தீர்ப்பாய விசாரணைக்கு வந்ததும் வராததுமாக சிறிது நேரத்தில் சென்று விட்டீர்களே?"

"சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டப்படி, இந்த விசாரணையில் புலிகள் அமைப்பைத் தடை செய்ய மத்திய அரசாங்கமோ அல்லது விடுதலைப் புலிகளோதான் எதிரெதிர் வாதங்களை வைக்க

இதற்கான கூட்டம் நடந்த இடம் அமெரிக்காவின் பிலடெல்பியா மாகாணம்.

'புலிகள் அமைப்பை தடை செய்த அமெரிக்க அரசாங்கம், இந்தக் கூட்டத்துக்கு அனுமதி தந்ததே'என்று புலி ஆதரவாளர்கள் சொல்கிறார்கள். இதை வைத்து, 'அமெரிக்க அரசாங்கமே நாடு கடந்த தமிழீழ அர்சாங்கத்தை ஆதரித்து விட்டதாக' வும் தவறான பிரசாரம் செய்கிறார்கள்.

நான் இது தொடர்பாக அந்த

இந்த விடயத்தில் கூர்மையுடன் கவனிக்க வேண்டியது ஜெயலலிதாதான். அவருக்கு சில பிரச்சினைகள் தொடங்கப்போகிறது!"

**ஜெயலலிதாவுக்கும் இதற்கும் என்ன...?**

"தனக்கு கொலை மிரட்டல் வருவதாக ஜெயலலிதா தினமும் புகார் சொல்லிக் கொண்டு இருக்கிறார். ஆனால், கொலை மிரட்டல்களை சர்வசாதாரணமாக விடுப்பவர்களும் விடுதலைப்புலி இயக்கத்தின் மீதான தடையை நீக்க வேண்டும் என்று வாதிடுபவர்களுமான ம.தி.மு.க. வை தன்னோடு கூட்டணியாக வைத்திருக்கிறார். எனக்கே கூட பகிரங்கமாக மிரட்டல் விடுத்தவர்கள் ம.தி.மு.க. கட்சிக்காரர்கள். அப்படியிருக்க... 'கொலை மிரட்டல் விடுக்கக் கூடியவர்களுடன் கூட்டணி சேர்ந்து இருக்கிறீர்களே... நீங்களே ஏன் இந்த மிரட்டல்

## சுப்பிரமணிய சுவாமி கேட்கிறார்


படிப்படியாக நடந்துவரும் நிலையில்... சுவாமி இப்போது திடீர் என்ட்ரி கொடுத்து சலசலப்பு ஏற்படுத்திவிட்டார். கடந்த 28 ஆம் திகதி சென்னை ராஜா அண்ணாமலைபுரம் 'இமேஜ்' அரங்கில் தான் இந்தக் காட்சி.

தீர்ப்பாயத்தின் நீதிபதி விக்ரமஜித் சென் முன்னால் ஆஜரான சுவாமி, "புலிகளின் ஆதரவாளர்களை இங்கு வாதிட அனுமதித்தால்.... என்னுடைய கருத்தையும் கேட்டாக வேண்டும்!" என்று கோரிக்கை வைத்தார். "இன்னும் ஐந்து பேரின் சாட்சிகளை நான் விசாரிக்கும்

முடியும். ஆனால், பத்திரிகைகளில் வந்த செய்திகளின் படி பார்த்தால்... வைகோ, நெடுமாறன் போன்றவர்கள் வாதாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், அரசுத்தரப்பு சாட்சியங்களை இவர்கள் குறுக்கு விசாரணை செய்ததாகவும் தெரிகிறது.

அப்படி அவர்களை அனுமதித்தால் என்னையும் வாதாட அனுமதிக்க வேண்டும் என்று நீதி பதியிடம் கேட்டேன். அவசரமாக டில்லிக்குச் செல்ல வேண்டி இருந் ததால் மற்ற சாட்சி விசாரணை முடியும் வரை காத்திருக்க முடியவில்லை. வேறு ஒரு காரணமும் இல்லை"

"தீர்ப்பாயத்தில் உங்கள் தரப்பு



நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ரொபர்ட் ஓ பிளேக் பெயருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். 'இப்படியாராவது வாதிட்டால், அது தவறானது' என்று அவரும் எனக்கு பதில் மின் அஞ்சல் அனுப்பியுள்ளார். இதை நான் இந்தத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப் போகிறேன்.

விடுதலைப் புலிகள், 'எங்கள் அமைப்பை கலைத்துவிட்டோம்' என்று அவர்களாகவே முன்வந்து கூறும் வரை தடை நீடிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசே புலிகள் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்று தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

நாடகத்தை அரங்கேற்றியிருக்கக் கூடாது?' என்று ஒரு கேள்வி ஜெயலலிதாவை நோக்கி எழுந்தால் என்ன ஆகும்?"

**"வைகோ, நெடுமாறன் ஆகியோர் தீவிரமான விடுதலைப்புலி ஆதரவாளர்கள். அவர்கள் இந்த தீர்ப்பாயத்தில் ஆஜராவதை எப்படி தவறு என்று கூற முடியும்?"**

"அவர்கள் இருவரும் ஆதரவாளர்கள் தான். அந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் கிடையாது. நெடுமாறனும் வைகோவும் புலிகளின் உறுப்பினர்களாக இல்லாத போது, எந்த அடிப்படையில் வாதிட முடியும்?"

### ஜூனியர் விகடன்


வரை நீங்கள் காத்திருங்கள்!" என்று நீதிபதி சொல்ல.... "நான் வேறு வேலை காரணமாக அவசரமாக டில்லி சென்றாக வேண்டும். உடனே என்னை விசாரித்து அனுப்பி வைக்க முடியுமா?" என்று கேட்டார். அதற்கு நீதிபதி மறுத்து விட்டார்.

பின்னர், மயிலாப்பூர் பாப்நாசம் சிவன் சாலையில் உள்ள அவரது வீட்டில் சுப்பிரமணிய சுவாமியை சந்தித்தோம்.

**வாதம் என்னவாக இருந்திருக்கும்?"**

"விடுதலைப்புலிகள் அமைப்பை இந்திய அரசாங்கம் என்ன காரணங்களுக்காகத் தடை விதித்ததோ.... அந்தக் காரணங் களும் நிலைமையும் இன்னும் நீடிக்கிறது. விடுதலைப்புலிகளின் பெயரில் வெளிநாட்டில் இன்னமும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. தனி ஈழம் அமைப்பதற்காக அவர்கள் தனி கவுன்சில் உருவாக்கி இருக்கிறார்கள்.

## 'தேமாமீற்றர்' உருவான விதம்!



கலிலியோவும், சாங்டோரியஸ் என்ற விஞ்ஞானியும் தனித்தனியாக தேமாமீற்றரைக் கண்டுபிடித்தனர். 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அவர்கள் இதைக் கண்டு பிடித்துச் சாதித்தனர்.

ஒரு குழாயின் முனையில் பல்புபோன்ற ஒரு குமிழ் இருக்கும். அதன் வழியாகத் திரவம் ஓடும். அந்த பல்பை உஷ்ணப்படுத்தினாலோ, குளிர்வித்தாலோ குழாயில் உள்ள திரவத்தின் அளவில் மாற்றம் ஏற்படும். அந்த மாற்றத்தை அளக்க, அங்குள்ள ஸ்கேசில் எண்கள் குறிக்கப்பட்டிருக்கும்.


நூறு ஆண்டுகளுக்குப் பிறகு 1714 இல் டேன்சிக்கைச் சேர்ந்த 'பாரன்ஹீட்' என்பவர் வெப்பத்தை அளக்க தேமாமீற்ற ருக் குள் பாதரசத்தைப் பயன்படுத்தினார். அதன்பின் 15 வரு டங்கள் கழித்து, குளிர்ச்சியை அளக்க அற்கஹோலை ரூமர் என்பவர் பயன்படுத்தினார். காரணம், 'மைனஸ்' 39 டிகிரியில் பாதரசம் உறைந்து போனதால் குளிர்ச்சியை அளக்க அதைப் பயன்படுத்த முடியவில்லை.1742 இல் 'செல்சியஸ்' என்பவர் சென்டிகிரேட் தேமாமீற்றரை உருவாக்கினார்.அது ஆரம்பத்தில் சோதனைக் கூட ஆராய்ச்சிக்கே பயன் படுத்தப்பட்டது. 100 டிகிரி அளவைக் கொண்டு பகுக்கப்பட்ட அதில், உறையும் அள வையும், கொதிநிலை அளவையும் எளிதில் குறிப்பிட முடிந்தது. இந்த இரண்டு நிலைக ளுக்கு இடையே உள்ள 100 டிகிரியை எளிதாகப் பகுக்க முடிந்தது.

## "பாம்புக்காது" என்பது சரியா?

பாம்பைப் பற்றி நாம் பெருமையாகக் கூறும் விடயங்களில் ஒன்று "பாம்புக்காது" என்பது. நன்றாகக் காது கேட "பாம்புச் செவி" உள்ளவர் என்கி றோம். ஆனால் பாம்புக்குப் கேட் கும் தன்மையே கிடையாது என்பது தான் உண்மை. அது ஒரு காது கேளா உயிரினம்.



பாம்பைப் போன்ற ஊர்வன வகையைச் சேர்ந்த எந்த ஓர் உயிரி னத்துக்கும் மனிதனைப் போன்றோ, பாலூட்டி களைப் போன்றோ "புறக்காது" கிடையாது. ஆனால் "மான்டிபுலார் வழி" என்ற காது துளை உண்டு. இத் துளை மூலம் அவற்றால் ஓசை களை நன்கு கேட்டு அறிய முடியும். ஆனால் பாம்புக ளுக்கு இந்த "மான்டிபுலார்" செவியும் கிடை யாது. காது சம்பந்தப் பட்ட புறச் செவி , செவித் துளை , செவிப்பறை எதுவும் இல்லாத உயிரி னம் பாம்பு.பாம்பின் செவித் திறனைப் பற்றி பழங் காலத்து நூல்கள் கூட வர்ணித்து எழுதியுள்ளன. விலங்கியல் நிபு ணர்க ளின் கருத்துப்படி பாம்பின் கபால எலும்புகளில் ஒன்றான "குவாட்ரேட்" என்பது "காதுமல்லா" என்ற குருத்துப் பகுதியும் ஒட்டி இணைந்து காணப்படும். இந்த அமைப்பு வேறு ஊர்வனவற்றில் கிடையாது. இந்த அமைப்பு இருப்ப தால் மிகவும் தொலைவில் ஏற்படும் அதிர் வலைகளைக் கூட அறிந்து கொள்ளும் திறனைப் பாம்பு பெற்று விளங்குகின்றது. இந்த அதிசயப் புலன் அமைப்பைத்தான் பாம்பின் கூர்மையான செவி அமைப்பு என்று நாம் தவ றாக புரிந்து கொண்டிருக்கி றோம். எப்படியோ காதுகளே இல்லாமல் செவித்திறன் மிக்க உயிரினம் என்று பாம் பின்புகழ்பாரெங்கும் பரவியது மட்டும் மறுக்க முடியாத உண்மை.





கிளிநொச்சி /முழங்காவில் மகாவித்தியாலயத்தில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மாணவியொருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் சித்தியடைந்த மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் இணைய மலையக மக்கள் முன்னணி விருப்பம்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி ,தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட விரும்புவதாக அறிவித்துள்ளது.

சாந்தினி சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்க ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் தற்போது ஒன்பது அரசியல் கட்சிகள் அங்கம் வகித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஊடாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள விரும்புவதாக மலையக மக்கள் முன்னணி கோரியதாக முன்னாள் பிரதி அமைச்சரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பொ.இராதகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பில் இணைந்து கொள்வதற்கு முன்னர் தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மலையக மக்கள் முன்னணியை தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளுமாறு கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாக எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும்தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பினால் நேற்றைய தினம் நடத்தப்படவிருந்த பேச்சுவார்த்தைகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலவச பாட நூல்கள் அனுப்பிவைப்பு

வடமராட்சி வலய கரவெட்டி,பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கல்விக்கோட்டங்களுக்கு இலவச பாட நூல்கள் கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும் இவ்வருடம் ஆரம்பிரிவுகளுக்கான பாட நூல் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் இது பற்றி கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ,நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சகல வகுப்புக்களுக்கும் உரிய பாட நூல்களை அனுப்பி வைப்பதாக உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-19)

# மழைக்காலம் ஆரம்பிக்கும் முன்னர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மக்களிடம் கோரிக்கை

## வன்னி கட்டளைத் தளபதி அறிவிப்பு

வவுனியா மெனிக்பாம் இலக்கம் 2,3, 4ஆகிய முகாம்களில் உள்ள மக்கள் மழைக்காலம் ஆரம்பிக்கும் முன்னர் இலக்கம் 1 மற்றும் 0 ஆகிய முகாம்களுக்கு வருமாறு கோரிக்கை விடுப்பதாக வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கூடாரங்களில் வசித்துவரும் இம் மக்களை தற்காலிக வீடுகளை கொண்டுள் முகாம்களுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமது இந்த நடவடிக்கையானது எவ்விதமான துன்புறுத்தும் நடவடிக்கை அல்ல எனவும் இது மற்றுமொரு மனிதாபிமான பணி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள கண்ணி வெடிகள் அகற்றப்பட்டவுடன் இந்த மக்கள் அவர்களது சொந்தக் கிராமங்களில் குடியமர்த்தப் படுவார்கள் எனவும் வன்னி கட்டளைத் தளபதி மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# ...டசாலைக்கான பல்லூடக தெறிகருவி ...ள்வனவுக்கு அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

யாழ். புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக பல்லூடகத் தெறி கருவி ஒன்றினை கொள்வவு செய்வதற்கென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ள்ஸ் தேவானந்தா நிதியுதவி வழங்கியுள்ளார்.

யாழ். புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய சமூகத்தினரின் அழைப்பின்பேரில் கடந்த திங்கட்கிழமை கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அங்கு இடம் பெற்ற நு...றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் பங்குகொண்டிருந்தார்.

அச்சமயம் கல்லூரி அதிபர் ஜே.ஏ.தவநாயகம் கல்லூரியில் நிலவும் பொதுவான குறைபாடுகளையும் கோரிக்கைகளையும் முன் வைத்த அதேவேளை மாணவர்களின் கல்வித் தேவைக்கென பல்லூடகத் தெறிகருவி தேவையாகவுள்ளது எனவும் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளில் மாணவர்களுக்கான பல்லூடக தெறிகருவியை பெற்றுத்தருவதாக அச் சமயம் அமைச்சர் உறுதியளித்திருந்தார். தமது உறுதிமொழிக்கு அமைவாக கடந்த 27ஆம் திகதி மகேஸ்வரி நிதியமூடாக அதற்குரிய பெறுமதியான ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவிற்குரிய காசோலையினை கையளித்தார். (ஸ்ரீ)

# விடுதலைப்புலிகளின் ஆயுத களஞ்சியம் செட்டிக்குளம் பகுதியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளினால் அரசு முக்கியஸ்தர்களின் வாகனங்களை தகர்ப்பதற்காக பயன்படும் காந்த குண்டுகள் வைக்கப்பட்டிருந்த ஆயுத களஞ்சியம் ஒன்றை விசேட அதிரடிப் படையினர் கடந்த 28ஆம் திகதி செட்டிக் குளத்தில் கண்டுபிடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிரடிப் படையின் வவுனியா பிராந்திய கட்டளைத் அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்ச கர் கே.எச் ஜெயவீரவிற்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பிரதேசத்திற்குச் சென்ற அதிரடிப்படையினர் இந்த களஞ்சியத்தை கண்டுபிடித்துள்ளதுடன் அதில் இருந்து ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

வாகனங்களில் ஒட்டக்கூடிய காந்தங்களுடனான 7 வெடிகுண்டுப்பொதிகள்,130 டெட்டனேற்றர்கள், தலா இரண்டு கிலோ கிராம் எடைகொண்ட இரண்டு குண்டுப் பொதிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் என தகவல்கள் கிடைத்துள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# இலங்கையில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது பயணிகள் கப்பல் இந்தியாவிடம் கையளிப்பு


(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது பயணிகள் கப்பல் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எம்.பி. லக்ஷத் வீப் சீ என்ற இந்தக் கப்பல் கொழும்பு-டொக் யாட் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது பயணிகள் கப்பலாகும். இந்தியா விடம் இதனைக் கையளிப்பது தொடர்பான விசேட நிகழ்வு கொழும் புத் துறைமுக கப்பல் தடாகத்தில் (டொக்யாட்) கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வின் போது கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசேர சமரசிங்க விசேட ஞாபகச் சின்னத்தை இந்திய உயர்ஸ்தானி கர் அசோக் கே. காந்தவிடம் கையளித்தார்.

இந்தக் கப்பல் இலங்கை இந்திய கொடிகளுடன் கொழும்பு துறைமுகக் கடற்பரப்பில் அன்றைய தினம் முதன் முறையாக வெள்ளோட்டம் விடப்பட்டது. 630 மீற்றர் நீளமும் 89 மீற்றர் அகலமும் கொண்ட இந்தக்கப்பலில் 250 பேர் பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உதுல் பிரேமரட்னவை நவம்பர் 12 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் உதுல் பிரே மரட்னவை எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுகேகொடை பொலிஸாரினால் சிறிகொத்தாவிற்கு எதிரில் கைது செய்யப்பட்ட உதுல் பிரேமரட்ன கோட்டே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

அத்துடன் பல்கலைக்கழகங்களில் அண்மைக்காலமாக நிலவி வரும் குழப்பநிலைமைகள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் உதுல் பிரேமரட்ன கைது செய்யப்பட்டதாகவும் இவரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் நடத்தப்படும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)


# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### உறவே...!

இரவுகளின் நீளத்தோடு - இதயத்தின்
வலியும் இப்போது புரிகிறேன்
கண்களில் சிறகடித்த கானங்கள்
கனவுகளாக போக
இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது
உறங்க மறுத்த உள்ளம் ஓராயிர
உள்ளக் குமுறலை உதிர்த்துக் கொண்டிருக்க
விழிகளை திறந்தாலும் மூடினாலும்
கடந்து சென்ற நினைவுகள் என்னை
காயப்படுத்தி செல்கின்றன
பாசம் வைத்த இதயங்களுக்கு
பிரிவுகளும் கண்ணீரும்தான்
இக்காலத்தின் சன்மானமா?
புரியாத புதிருக்கு பதில்சொல் இதயமே???

மரியநேசன் ரோசி
கொலி பமிலி கொஸ்ரல்



### கனவுகளில் உயிர்வாழும் காதல்

பிரிவதில்லை காதல் என்றாய்
பிறகு பிரிவை மட்டும்
ஏன் எனக்கு
வலியாய்த் தந்தாய்?
நிஜங்கள் அழிவதில்லை
என்றாய்
என் நிஜ அன்பை
மட்டும் இன்னும்
ஏன் உணர மறுக்கிறாய்?
கனவுகள் நிஜமாவதில்லைதான்...!
ஆனால் நிஜங்களைவிட
கனவுகளையே நான்
அதிகம் விரும்புகிறேன்
ஏன் தெரியுமா அன்பே?
கனவுலகில் தான்
உன்னோடு உறவாட
முடிகிறது என்பதால்!

செ.ரவிசாந்
குப்பிளான்



### தொலைவுகள்

என்னை உனக்கு
பிடித்துக்கொண்டது
உன்னை எனக்கு
பிடித்துக்கொண்டது
ஆனாலும்
நம்மிருவரையும்
பிரித்துக்கொண்டது
இடைவெளிகள்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்



### நட்பு

தென்றலை நேசிப்பேன் - புயல்
வரும்வரை
பூவை நேசிப்பேன் வாடிடும்வரை
நிலவை நேசிப்பேன் விடியும்வரை
உன்னை நேசிப்பேன்
உயிர் உள்ளவரை நண்பியே...

ச.ஜனனி
பருத்தித்துறை

### இமயம் தொட...



உன் வெற்றிக்காய் வரும்
பாராட்டுக்களை
பரிசாய் ஏற்றுக்கொள்
பதவியில் பிரயோகிக்காதே!
பாராட்டு என்பது
வெற்றிக்கான பரிசே
உனது வெற்றியின்பின்
எத்தனை தோல்விகள்
தோல்வியின் முடிவதான்
வெற்றியின் ஆரம்பம்

மாவை. நா.கஜேந்திரா

### பூரிப்பு

பரீட்சையில்
திராட்சை பறித்து
அன்னை பூமியில் கல்விப் புலத்துக்கு
சுகந்தம் பரப்பிட
பல்வர்ண மலர்களே
இனிவரும் குருத்துக்களின்
வழிகாட்டிகளே - இன்று
பட்டமளிப்புக்காய்
தலைநிமிரும் உங்கள்
வதனம் கண்டு பூரிப்படைகின்றோம்

ஆ.முல்லைதிவ்யன்
பொலிகண்டி

## மௌனத்தின் தேடல் - 42



கோலாகலமாய்
பட்டமளிப்பு விழா
எம் கனவுகள்
எல்லாம் இன்று
நனவாகிறது

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

பட்டங்கள் பெற்று
பதவிகளில் உயர்ந்து
பெற்றதாய்க்கும்
பிறந்த பொன் நாட்டுக்கும்
பெருமை சேர்த்திட
நாளும் உழைத்திடுவீர்

வி.அபிசன்
துன்னாலை

பல்கலைக் கழகத்தில் படித்து
பவனியிலே மேதைகளாக வர
பட்டங்கள் பலபெற்றோம்
ஆனால்...
இந்தப் பட்டங்கள்
எப்போது எமக்கு
ப்தவிகளாக மாறப்போகிறது?

சோ.சுலக்ஷனா
கோப்பாய்

### திட்டம்

பட்டம் பெற்றுவிட்டீர்கள்
இனித் திட்டம்
எந்த நாடு செல்வதென்றா?

மெலிஞ்சியூரான்
ஊர்காவற்றுறை

### பட்டம்

பள்ளியில் இணைந்து
மீண்டும் பிரிந்து
பல்கலைக் கழகமதில்
பட்டத்துடன் இணைந்து
பாதையில் காத்திருப்பு
பட்டத்திற்காக

வி.கஜேந்திரன்
யா/நெல்லியடி ம.ம.வி

பெருந்துயர் வந்தபோதும்
வருந்திப் படித்துயர்வோம்
கல்விச் சொத்து எமதென்று
காசினிக்கே காட்டிடுவோம்

வ.மிதுஷன்
யா/நெல்லியடி ம.ம.வி

### நீதி வெல்லட்டும்

பட்டம் பெறும் இளையோர் நீவிர்
பட்ட அறிவுடன்
சட்ட வல்லுநர்களாகவும் தோன்றி
திட்டமிடும் அநீதியாளர்களை
நீதியால் விதி செய்திடுவீர்.

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

### காத்திருப்பு

பல்கலை தொடங்கி
பட்டம் பெறும்வரையும்
காத்திருந்தோம்... இனி
பட்டதாரியானபின்பும்
காத்திருப்பா ?

பொ.கிருசாந்
சங்கானை

இன்னல்கள் பட்டும்
இமையாது கற்று
இலட்சியத்தை அடைந்தீர்
ஈன்றவள் உள்ளம் உவகையுறும்
இதுகேட்டு

செல்வராசா அனுசா
கருணாநிலையம்
கிளிநொச்சி

### கலைமானிகளின் தவிப்பு

கல்வியென்னும் படகிலே!
பயணங்கள் நாம் செய்து
அறுபத்து நான்கு கலைதன்னை
ஆர்வத்துடன் கற்றுவிட்டு
கல்விமானிப் பட்டம்தன்னை
கரமதிலே தாங்கியவண்ணம்
காலமெல்லாம் காத்திருக்கிறோம்
தொழில் என்னும்
உயர்வை நாடியே!

அன்ரனியேசுதாசன் மேரி அஜந்தா
எழுவைதீவு

கல்வி எனும் கடலிலே
படகாக இருந்தீர்கள்
திசைமாறிச் செல்லாது
கரை தேடித் திரிந்தீர்கள்
அலையாக வந்த துன்பம்
புயலாக வந்ததுயரம் (தாண்டி)
கரைசேரும் நாளின்று

மடத்துக்கடவை
யோகி

பட்டமளிப்பு விழா
பண்பாட்டின் அறிவுசார்
விருத்தியின் அடையாள விழாவா?
அந்தஸ்தின் அடையாள விழாவா?
வேலையற்றோர் பட்டியலின்
நீளுகைக்கான அடையாளமோ?

அ.நிசாந்தி
யாழ்.பல்கலைக்கழகம்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 43



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 05.11.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# கைத்தொலைபேசிகளால் வறுமைக்கு எதிராகப் போராட உதவ முடியும்

## ஐ.நாவின் அறிக்கை பரிந்துரை



கைத் தெலைபேசிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலமாக கிடைக்கக்கூடியதாகவுள்ள வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தி வறுமைக்கு எதிராகப் போராடுவதற்கு அரசாங்கங்களும், கொள்கை வகுப்பாளர்களும் முன்வர வேண்டும் என்று ஐ.நாவின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான மாநாடு (UNCTAD) வெளியிட்டுள்ள தகவல் பொருளாதார அறிக்கை – 2010 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத் தொலைபேசிகள் மற்றும் ஏனைய தகவல் தொடர்பாடல் சாதனங்களை உபயோகித்து, வறுமையுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் எதிர்பாராத அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக புத்தாக்கமான வழியில் அவை உபயோகிக்கப்படுகின்றன என்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கையில் 75சத வீதத்திற்கும் அதிகமான வீடுகளில் ஏதோவொரு வகையிலான தொலைபேசி உபயோகிக்கப்படுகின்றது.

தற்போதைய தொழில்நுட்பமானது மிகவும் எளிமையானதாகவும், அனைவருக்கும் இயலக்கூடியதொன்றாகவும் உள்ளமையினால் வருமானம் குறைந்த நாடுகளில் பண்ணையாளர்கள், மீன் பிடிப்பவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் தங்களுடைய வாழ்வாதாரங்களுக்கு உதவுவதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை இன்னும் அதிகமாக உபயோகிக்கின்றனர்.

உதாரணத்திற்கு தம்புள்ளைக்கு அருகிலுள்ள சில விவசாயிகள் தங்களுடைய கைத்தொலைபேசி மூலமாக சரியான வேளையில் துல்லியமான சந்தை விலை பற்றிய தகவலைப் பெற்றே சந்தைக்கு கொண்டு வருகின்றனர் என லிர்ன்ஏசியாவின் அண்மைய ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது.

நைகரிலே தானிய வியாபாரிகளும்; இந்தியாவிலே மீனவர்களும் கைத்தொலைபேசிகள் மூலம் நல்ல பயன்பெறுகிறார்கள்.

இவ்வாறே சந்தை விலைகள், வருமானத்தை ஈட்டுகின்ற வாய்ப்புக்கள், காலநிலை அறிக்கைகள், விவசாயத்தில் சிறந்த நடைமுறைகள், சுகாதாரம், நிதி மற்றும் அனர்த்த ஆபத்தைக் குறைப்பது தொடர்பான தகவல்கள் வறிய மக்களுக்கு கிடைப்பதற்கும், இந்த வாய்ப்புகளைக் களை வறிய மக்கள் பூரணமாக பயன்படுத்துவதற்கும் தேவையான கொள்கைத் திட்டங்களை வடிவமைக்குமாறு இந்த அறிக்கையானது அரசாங்கத்தையும், கொள்கை வகுப்பாளர்களையும் வலியுறுத்துகின்றது.





# நிதிக் கம்பனிகள் சட்டமூலத்திற்கு பதிலாக நிதி வர்த்தக சட்டமூலம் -ஆளுநர்


அஜித் நிவாட் கப்ரால்

தற்போதுள்ள நிதிக்கம்பனிகள் சட்டமூலத்திற்குப் பதிலாக புதிய நிதி வர்த்தக சட்டமூலம் ஒன்றை, வரவு செலவுத் திட்ட விவாதத்திற்குப் பின்னர் சமர்ப்பிப்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். கடந்த வியாழனன்று மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்களின் வைப்புகள் 2009 செப்ரெம்பருடன் ஒப்பிடுமிடத்து இந்த வருட செப்ரெம்பர் மாதம் ரூ.2163 பில்லியனில் இருந்து ரூ.2432 பில்லயனாக அதிகரித் துள்ளது. இது எமது நிதிச் சந்தையிலுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது எனத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சில வருடங்களாக மத்திய வங்கி மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் ம.வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கிகளினதும், நிதி நிறுவனங்களினதும் பெயர்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. ஏனைய பதிவு செய்யப்படாத நிறுவனங்களுடன் இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தபோது நாட்டின் சட்டங்களின் பிரகாரம் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தரத்திற்கு அமைவாக இந் நிறுவனங் கள் செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந் நிறுவனங்களில் ஏதாவது தவறுகள் காணப்பட்டால் அதனை தீர்த்துவைப்பதற்கான அதிகாரமும் பொறுப்பும் மத்திய வங்கிக்கு உள்ளது. அதனை செய்வதற்கு மத்திய வங்கி எப்போதும் தயங்கியதில்லை என்றார்.



கொழும்பு டொக்யாட் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது பயணிகள் கப்பலான எம்.வி.லக்ஷகண்ட்வீப் சீ என்ற கப்பல் கடந்த வியாழனன்று இந்திய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. 89 மீற்றர் நீளமும் 630 மீற்றர் ஆழமும் கொண்ட இந்தக் கப்பலில் 250 பேர் பயணிக்க முடியும். 18 மில்லியன் டொலர் பெறுமதியான இந்தக் கப்பல் டொக்யாட் இந்த வருடம் கடடி இந்தியாவிடம் கையளித்த இரண்டாவது கப்பலாகும்.

## செய்தித் துளிகள்

### ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

2010 ஓகஸ்ட் மாத ஏ/தி வருவாய் 760 மில்.அமெ. டொலராக 7வீதத்தால் அதிகரித்துள்ளது. இதேபோல், இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களின் மொத்த ஏற்றுமதி வருவாயும் 11 வீதம் அதிகரித்து 5040 மில்.அமெ.டொலராகியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேபோல், ஓகஸ்ட் மாத இறக்குமதிச் செலவும் 36வீதம் அதிகரித்து 1143 மில்.அமெ.டொலராகவும், இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களுமான மொத்த இறக்குமதி 37 % அதிகரித்து 8670 மில்.அமெ. டொலர்களுமாகும்.

இதனால் குறித்த காலப் பகுதிக்கான வர்த்தகப் பற்றாக்குறை 3630 மில்.டொலர்என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்திய நிறுவனங்களுடன் கைகோர்க்கிறது வால்மார்ட்

(டில்லி)

சர்வதேச அளவில் சில்லறை வணிகத்தில் முடிசூடா மன்னனாக விளங்கும் வால் மார்ட் நிறுவனம் இந்தியாவிலுள்ள வர்த்தக நிறுவனங்களுடன் கைகோர்க்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இது குறித்து வால் மார்ட் தலைவர் டில்லியில் தெரிவித்ததாவது,

இந்திய நிறுவனகளுடன் கைகோர்க்க இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்திய சந்தையில் கால் பதிக்கும்பொருட்டு, தங்கள்நிறுவனம் இந்தத் திட்டத்திற்காக 400 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை விபரம்


CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6685.99 | 6678.05 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7270.80 | 7241.77 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 27,524.41 |

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): ஜஸ்ரனர் ஒப் சிலோன்(108.50), ஹுஜே இன்ரநஷனல் இன்வெஸ்ட்.(64.00), என்வெயர்மென்டல் றிசோசஸ்(86.40), கொமர்ஷியல் டெவலொப்மன்ட்(61.90), ALUFAB PLC(42.50).

சரிவடைந்த பங்குகள்(ரூ.): சிலோன் இன்வெஸ்மென்ட்(123.20), சென்ரல் இன்டஸ்ரீஸ்(110.00), எஸ்.பி.டிய(21.30), பியூப்பிள்ஸ்லீசிங்பினான்ஸ்(89.80), பேருவளை கோல்ட் (131.00). மேலதிக தகவல்கள்: www.cse.lk



2009-ம் ஆண்டுக்கான வரி விதித்தல் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஆணைக்குவின் தலைவர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மனால் கையளிக்கப்படுவதைக் காணலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.96 | 112.64 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.36 | 180.20 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.46 | 157.32 |
| சுவிஸ் பிராங் | 111.71 | 115.45 |
| கனேடிய டொலர் | 107.66 | 111.35 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.47 | 110.80 |
| சிங்கப்பூர் டொலர் | 85.05 | 87.21 |
| ஜப்பான் யென் | 1.36 | 1.40 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.52 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.41 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் புதிய முதலீட்டுத் திட்டம்

ஆயுட் காப்புறுதித் திட்டமொன்றின் பிரதியீடாக திகழும் NPIP மூலம் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு முதிர்வு காலத்தில் ஒரு கணிசமான தொகையை பெற்றுக்கொள்ள முடியும் என்று நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் விநியோக மார்க்கங்களுக்கான சிரேஷ்ட முகாமையாளர் ஆர்.எஸ். விமலநாதன் தெரிவித்தார்.

இத் திட்டம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது, எதிர்காலத் தேவையொன்றுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை மாதாந்தம் சேமிக்க இத் திட்டம் உதவுகிறது. மேற்படிப்பைத் தொடரவோர் வாகனக் கொள்வனவுக்கோ அல்லது தமது வீட்டு மீள் நிர்மாணப் பணிகளுக்கோ ஒரு முதலீட்டுத் திட்டமாகவே இது அமையும். சுயதொழில் முயற்சியாளர்கள் கூட தமது இலாபத்தில் ஒரு பகுதியை இம் முதலீட்டுக்கென ஒதுக்குவதன் மூலம் எதிர்காலத்தில் தங்கள் வர்த்தகத்தை விஸ்தரிக்க முடியும். 10 சதவீத வருடாந்த வட்டியில் 18 வருட முதிர்வு காலத்தைக் கொண்ட திட்டமாகும் இதுவெனவும் தெரிவித்தார்.

## இவர்கள் சொன்னவை...

டயலொக் தலைவர் ஹான்ஸ் விஜசூரிய



2010இன் முதல் 9 மாதங்களில் டயலொக் குழுமத்தின் வரிக்கு பிந்திய தேறிய லாபம் 3.77 பில்லியன் ரூபாய்களாகும். இது கடந்த ஆண்டைவிட 138% அதிகரிப்பு

CDB CEO மகேஷ் நாணயக்கார



2010 செப்ரெம்பர் 30இல் முடிபடைந்த முதல் 6 மாதங்களில் வருமானம் 882 மில்லியன். வரிக்கு முந்திய இலாபம் 112 மில். வரிக்குப் பிந்திய இலாபம் 100 மில்லியன்.

சம்பத் தலைவர் ஐ.டபிள்யூ.சேனநாயக்க



சம்பத் வங்கி வரிக்குப் பிந்திய இலாபமாக 2009 மில்லியனை பதிவு செய்துள்ளது. 2009இல் 1330 மில்லியனாக இருந்தது.

## ஜெர்மனிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு விரைவில் இலங்கைக்கு விஜயம்

ஜெர்மனிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 2 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் ஆசியாவிற்கான ஜெர்மனிய பாராளுமன்றக் குழுத் தலைவர் டக்மார் எர்னஸ்ட்பேர்கர் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஜெர்மனிய பிரதிநிதிகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், சிவில் அமைப்புப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள் குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமைகளையும் நிலக்கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளையும் ஜெர்மனிய பாராளுமன்றக் குழுவினர் நேரில் பார்வையிடவுள்ளனர். (ஸ்ரீ-2)

## வீதி விளக்கு இன்மையால் மக்கள் பெரும் சிரமம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியில் இருந்து கோப்பாய் வரையான பகுதிகளில் இரவில் மின்விளக்கின்மையால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவ்வீதியால் பயணத்தை மேற்கொள்வதற்கு முடியாமல் உள்ளது.

அத்தோடு இவ்வீதி ஒரு பிரதான வீதியானபடியால் இரவு வேளைகளில் வீதி விளக்கு கள் பொருத்த சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் நடவடிக்கை எடுத்து மக்களின் பயணத்திற்கு உதவ முன்வர வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ள்னர். (ஸ்ரீ-134)

## இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

### தமிழக பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தமிழக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்தகாலங்களுடன்ஒப்பீடுசெய்யும் போது மிகவும் குறைந்தளவான எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழ் அகதிகளே தமிழகத்தில் அடைக்கலம் கோருவதாக தமிழக பொலிஸ் பொறுப்பதிகாரி லத்திகா சரண் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிலையத்தின் புதிய புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் அதிகளவான இலங்கைத்தமிழ்அகதிகள்நாடுதிரும்பிவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் ஆயிரத்து 280 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 849 பேர் மட்டுமே நாடு திரும்பியதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜூலை மாத இறுதியில் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி தமிழகத்தில் 112 முகாம்களில் 71 ஆயிரத்து 654 பேரும் வெளியிடங்களில் 32 ஆயிரத்து 467 பேரும் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி இவ்வாண்டு ஜூன் மாதம் வரையில் 64 நாடுகளில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 98 இலங்கையர்கள் அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி கண்டி மாநகரசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

ஜனநாயகத் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலைசெய்யுமாறு கோரி கண்டிமாநகரசபையில் விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சரத்பொன்சேகாவிற்கு ஆதரவான இந்தத் தீர்மானம் ஒருமேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்திற்கு ஆதரவாக ஏழு உறுப்பினர்களும் எதிராக ஆறு உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர்.

கண்டி மாநகரசபையின் மேயர் ராஜா புஷ்பகுமார் மற்றும் பிரதி மேயர் சுமிந்த விக்கிரமசிங்க ஆகியோர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் இந்த வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் மாநகரசபை உறுப்பினர் அப்டீன் இந்த யோசனைத் திட்டத்தை முன்வைத்த தாகவும் ஜே.வி.பி.யின் அனுர கோனவல அதனை வழிமொழிந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அன்பொளி கல்வியகத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வேலாயுதபிள்ளைஞானகாந்தன், சிறப்புவிருந்தினராக யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## 2010.10 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 0475 -ரோமுலஸ் ஆகுஸ்டலஸ் உரோமப் பேரரசன் ஆனான்.
- 1517 - கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கம் மார்ட்டின்லூதர் தனது 95 கொள்கைகளை ஜெர்மனியின் விட்டன்பேர்க் தேவாலய வாசலில் வெளியிட்டார்.
- 1803 - கப்டன் ட்றைட்பேர்க் தலைமையில் ஆங்கிலேயப் படைகள் பண்டாரவன்னியனின் படைகளைத் தாக்கின. பலர் கொல்லப்பட்டனர்.
- 1863 - நியூசிலாந்தில் நிலைகொண்ட பிரித்தானியப் படைகள் "வைக்காட்டொ" என்ற இடத்தில் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து மவோரி போர்கள் மீண்டும் ஆரம்பமானது.
- 1864 - நெவாடா ஐக்கிய அமெரிக்காவின் 36ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1876 - இந்தியாவின் கிழக்குக் கரையில் இடம்பெற்ற மிகப்பெரும் சூறாவளி காரணமாக 2 இலட்சம் பேர் வரை இறந்தனர்.
- 1913 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது நெடுஞ்சாலை லிங்கன் நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.
- 1924 - உலக சேமிப்பு தினம் இத்தாலியின் மிலானோ நகரில் சேமிப்பு வங்கிகளின் உலக அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.
- 1931 - தமிழின் முதல் பேசும் படம் காளிதாஸ் வெளியானது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஐஸ்லாந்துக்கு அருகில் அமெரிக்கக் கப்பல் ஒன்றை ஜெர்மனியின் படகு தாக்கி மூழ்கடித்ததில் 100 அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 1941-இங்கிலாந்தில் தொழிற்சாலை ஒன்று தீப்பற்றியதில் 49 பேர் கொல்லப்பட்டனர்.
- 1954 - அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கெதிராக அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி போராட்டத்தை ஆரம்பித்தது.
- 1956 - ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் சுயஸ் கால்வாயைத் திறக்க வற் புறுத்தி எகிப்தின் மீது குண்டுகளை வீசின.
- 1961 - ஸ்டாலினின் உடல் மொஸ்கோவில் உள்ள லெனினின் நினைவகத்தில் இருந்து அகற்றப்பட்டது.
- 1963 - இண்டியானாவில் பனிக்கட்டி சறுக்கல் களியாட்ட விழா ஒன்றின் போது இடம்பெற்ற வெடிவிபத்தில் 74 பேர் கொல்லப்பட்டு 400 பேர் காயமடைந்தனர்.
- 1968 - வியட்நாம் போர்: பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வட வியட்நாம் மீதான அனைத்துத் தாக்குதல்களையும் நவம்பர் முதலாம் திகதியில் இருந்து நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் அறிவித்தார்.
- 1969 - வோல் மார்ட் தொடங்கப்பட்டது.
- 1994 - அமெரிக்க விமானம் ஒன்று கடும் பனி காரணமாக இண்டியானாவில் விபத்துக்குள்ளாகியதில் 68 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996- விமானமொன்று பிரேசிலில் விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த அனைவரும் (98) தரையில் இரண்டு பேரும் கொல்லப்பட்டனர்.
- 1999-எகிப்திய விமானம் ஒன்று மசாசுசெட்சில் வீழ்ந்ததில் அதில் ப்யணஞ் செய்த 217 பேரும் கொல்லப்பட்டனர்.
- 2000 - சிங்கப்பூர் போயிங் 747-400 விமானம் தாய்வானில் விபத்துக்குள்ளாகியதில் 83 பேர் கொல்லப்பட்டனர்.
- 2000 - வடக்கு அங்கோலாவில் தனியார் அண்டோனொவ் விமானம் வெடித்துச் சிதறியதில் 50 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - 22 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் மலேசியப் பிரதம மந்திரி மகதிர் பின் முகமது தமது பதவியைத் துறந்தார்.

### பிறப்புகள்

- 1795 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (இ. 1821)
- 1875 - வல்லபாய் பட்டேல், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1950)
- 1922 - நொரொடோம் சிஹானூக், கம்போடிய அரசர்.
- 1930 - மைக்கேல் கொலின்ஸ், அமெரிக்க விண்வெளி வீரர்.
- 1933 - துரை இராஜாராம், தமிழக எழுத்தாளர்.

### இறப்புகள்

- 1881 -பண்டார வன்னியன், வன்னி மன்னன்.
- 1975 -எஸ்.டி.பர்மன், இந்திய இசையமைப்பாளர் (பி. 1906)
- 1984 - இந்திராகாந்தி, இந்தியப் பிரதம மந்திரி (பி. 1917)
- 1986 - ரொபேர்ட் மலிக்கென, நோபல் பரிசுபெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1896)
- 2003 - செம்மாங்குடி சிறிநிவாச ஐயர், இந்திய கர்நாடக இசைப் பாடகர். (பி. 1908)
- 2005 - அம்ரிதா பிரீதம், பஞ்சாபி எழுத்தாளர் (பி. 1919)
- 2005 - பி.லீலா, பின்னணிப் பாடகி.

**1984 - இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் புதுடில்லியில் இடம்பெற்ற கலவரத்தில் சுமார் 3ஆயிரம் சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.**





# நானே என்னுள் இல்லை

திரைவிமர்சனம்

இருநூறுக்கும் மேற்பட்ட படங்களில் முன்னணி கதாநாயகியாக நடித்திருக்கும் கலைமாமணி நடிகை ஜெயசித்ரா கதை, திரைக்கதை எழுதி இருப்பதுடன் தயாரித்து இயக்கவும் செய்து தன் 21 வயது மகன் அம்ரேஷ் கணேஷையே கதா நாயகராகவும், இசையமைப்பாளராகவும் அறிமுகம் செய்தி ருக்கும் படம் நானே என்னுள் இல்லை, என்பது ஹைலைட்.

தொப்பையும் தொந்தியுமாக இருக்கும் ஹீரோ அம்ரேஷ் கணேஷ், நாசர், சரண்யா தம்பதியின் மகன். கோபக்கார அப்பா- குணவதி அம்மா இவர்களின் செல்ல மகனான அம்ரேஷை படிக்கும் காலத்தில் காதலிக்கிறார் உடன் படிக்கும் நாயகி ஆர்யா மேனன்.

ஆனால் ஆர்யா மேனனின் அம்மா குயிலிக்கோ மகளை பெரிய ஸ்டார் ஆக்க வேண்டுமென்பது இலட்சியம். அதன் விளைவு இவர்களது காதலுக்கும், நட்புக்கும் குயிலியும் அவரது மகன் சந்துருவும் நந்தியாக இருந்து அம்ரேஷை அடித்து உதைத்து அனுப்புகின்றனர்.

இதனால் வெறுத்துப் போய் வாழும் அம்ரேஷுக்கு எதிர்பாராமல் அடிக்கிறது லக்கி ஜாக்பொட். இவரை ஏதேச்சையாக பார்க்கும் சினிமா இயக்குநர் பி.வாசு, நீதான் என் அடுத்த படத்தின் ஹீரோ என அதிரடி ஒப்பந்தம் செய்ய அதனால் சந்தோஷத்தின் உச்சத்திற்கு போகிறார் அம்ரேஷ். ஆனால் அந்த சந்தோஷம் சில நாட்களுக்குத்தான். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே அம்ரோஷுக்கும் அவரது காதலுக்கும் வில்லனாக இருக்கும் சினிமா பைனான்சியரின் மகன் ராகவ், அம்ரேஷ் ஹீரோ ஆகும் விடயத்திலும் விஷமத்தனம் செய்கிறார்.

இதையெல்லாம் மீறி அம்ரேஷ் சினிமா ஹீரோவாக ஜெயித்தாரா? காதலியை கரம் பிடித்தாரா? அப்பாவுக்கு பிடித்த பிள்ளையாகவே வாழ்ந்தாரா? என்பது எதிர்பாராத திருப்பங்கள் நிறைந்த மீதிக் கதை!

நிஜத்தில் தன் செல்ல மகனை என்னவெல்லாம் ஆக்கிப் பார்க்க வேண்டுமென்று நடிகை ஜெயசித்ரா விரும்புகிறாரோ அதையெல்லாம் அவரது முதல் படத்திலேயே செய்து பார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பது காட்சிக்கு காட்சி புலப்படுகிறது. ஆனாலும் அந்தக் காலத்து டிராமா பாணி திரைக்கதை பலவீனம்.



புதுமுக ஹீரோ அம்ரேஷ் தன் அம்மாவின் ஆசை அறிந்து சிம்பு, பரத் உள்ளிட்ட இளம் ஹீரோக்களின் சாயலில் நடிப்பிலும், துடிப் பிலும் வெளுத்து கட்டி ரசிகர்களுக்கும் கொமர்ஷியல் விருந்து படைத்திருக்கிறார் என்றால் மிகையல்ல. ஆனாலும் அம்ரேஷின் நடிப்பை விட இசையமைப்பு பிரமாதம். அதுதான் படத்தின் பலமும் கூட . புதுமுக நாயகி ஆர்யா மேனனில் தொடங்கி நாசர், சரண்யா, குயிலி, சத்யப்ரியா, வில்லன் ராகவ், இய-க்குநர் பி.வாசு, கே.எஸ். ரவிக்குமார் வரை சகலரும் தங்கள் பங்கை சரியாக செய்திருக்கின்றனர்.

மொத்தத்தில் "நானோ என்னுள் இல்லை" படத்தின் வெற்றி ரசிகர்களின் கையில் இருக்கிறது.

# ரஜினியின் அடுத்த டூயட் யாரோடு?

ரஜினியை இன்னும் அதே இளமையோடு தான் ரசிகர்கள் பார்க்க விரும்புகிறார்கள் என்பதை எந்திரன் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது. இந்தநிலையில் ரஜினியோடு அடுத்த டூயட் பாடப்போகும் ஹீரோயின் யார் என்ற பரபரப்பு சினிமா வட்டாரத்தில் ஆரம்பித்து விட்டது.

ரஜினியின் " ஹரா" (சுல்தான் திவாரியார்) படத்தில் அவருக்கு ஜோடியாக வித்யாபாலன் நடிப்பார் என செய்திகள் கசிகின்றன. இந்தியில் வெளியான சந்திரமுகி ரீமேக்கில் சந்திரமுகியாக நடித்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எந்திரனில் இந்தி பதிப்பான ரோபோ படத்தின் சிறப்புக்காட்சி மும்பையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட பாலிவுட் இளம் நடிகைகள் ரஜினியுடன் நடிக்க தம் விருப்பத்தை தெரிவித்துக் கொண்டனர். சோனக்ஷி சின்ஹா 'ரஜினியுடன் நடிக்க எனக்கு வாய்ப்பு வந்தால் நான் சந்தோஷப்படுவேன்' எ ன்று சொன்ன போது அருகில் இருந்த பிரியங்கா சோப்ரா' ரஜினி யோடு சேர்ந்து நடித்தால் அதை விட சந்தோஷம் என் வாழ்வில் எதுவும் இல்லை. என் முதல் படம் தமிழில் தான் அமைந்தது. ரஜினி இந்தியாவின் சுப்பர் ஸ்டார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" என்று சொல்லி துள்ளிக் குதித்தார்.

ஆனால் எல்லோரும் வாயில் கை வைக்கும்படி அந்த வாய்ப்பு வித்யாபாலனுக்கு வாய்த்திருக் கிறது.

இதுகுறித்து வித்யாபாலன் பேசுகையில், 'ரஜனியியோடு நடிப்பது இன்னும் முடிவாகவில்லை. ஆனால் அந்தவாய்ப்பு வந்தால் நான் ரொம்ப சந்தோஷப் படுவேன். இந்த செய்தியை கேட்டதும் என்னை விட என் பெற்றோருக்கு தான் அதிக மகிழ்ச்சி. ரஜினியோடு நடிக்க நான் கொடுத்து வைத்திருக்கவேண்டும்' என்று பரவசத்தோடு தன் உணர்வை வெளிப்படுத்தியிருக் கிறார்.

' மன்மதன் அம்பு' ஷூட்டிங் முடித்திருப்பதால் 'ஹரா' பணிகளில் இறங்கிவிட்டார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார். அனிமேஷன் ரஜினிக்கு விஜயலட்சுமி ஜோடியாக நடித்துக்கொண்டிருக்க, ஒரிஜினல் ரஜினிக்கு ஜோடி யாரு என்பது விரைவில் தெரிய வரும்.

# எந்திரன் மீது திருட்டு கதை புகார்!





என் கதையான, " ரோபாட்" தொழிற்சாலையை , " எந்திரன் படமாக வெளியிட்ட இயக்குநர் சங்கர்மீதும், துணையாக இருந்தவர்கள்மீதும் காப்புரிமை சட்டப்படி வழக்கு பதிந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என எழுத்தாளர் ஆர்னிகா நாசர், சென்னை பொலிஸில் மனு அளித் துள்ளார்.

ரைடக்டர் ஷங்கர் இயக்கிய, எந்திரன் படம் சமீபத்தில் வெளியானது. இப்படத்தின் கதை தன்னுடையது என்று புலனாய்வு பத்திரிகை துணை ஆசிரியரான அமுதா தமிழ்நாடன், சென்னை பொலிஸில் சில தினங்களுக்கு முன் புகார் அளித்துள்ளார். இந்நிலையில், எழுத்தாளர் ஆர்னிகாநாசரும் பொலிஸில் புகார் மனு அளித் தி[illegible]ர். புகாரில் கூறியிருப்பதாவ[illegible]

நான், கடந்த 25 ஆண்டுகளாக சிறுகதைகள், விஞ்ஞான கதைகள் மற்றும் நாவல்கள் எழுதி வெளியிட்டு வருகிறேன். கடந்த 1995 ஆம் ஆண்டு எழுதிய, "ரோபாட்" தொழிற்சாலை என்ற நாவல், குமுதம் குழுமத்தின் வெளியீடுகளில் ஒன்றான, மாலைமதி இதழில், ஜூலை 13,1995 இதழில் வெளியானது. சமீபத்தில் வெளிவந்த, " எந்திரன் படத்தை பார்த்த என் வாசகர்கள் பலர், என் கதையில் இருந்து பெரும்பாலும் கொப்பி அடிக்கப்பட்டு, அந்தப் படம் எடுக்கப்பட்டிருப்பதாக தெரி வித்தனர்.

படத்தை நானும் பார்த்தேன். என் கதையில் வந்த பல சம்பவங்கள் படத்தில் முக்கியமான காட்சிகளாகப் படமாக்கப்பட்டுள்ளது கண்டு அதிர்ச்சியடைந்தேன். காப்புரிமை சட்டப்படி நான் முதல் உரிமையாளர். அப்படி இருக்கும்போது, இயக்குநர் ஷங்கர், இந்தக் கதையின் முக்கிய பகுதிகளை தன் சொந்த கற்பனையில் உருவான கதை என்று இலாபம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் திரித்துக் கூறி, பலரை ஏமாற்றி , " எந்திரன்" திரைப்படத்தை உருவாக்கியுள்ளார்.

காப்புரிமை சட்டப்படி, முதல் உரிமையாளரான என் அனுமதியில்லாமல் , என் கதையை திரைப்படமாக்கி வெளியிட்டதன் மூலம் எனக்கு பல கோடி ரூபாய் சட்டவிரோத நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார். எனவே, என் கதையை திருடியவர்கள் மீது இந்திய காப்புரிமை சட்டப்படி வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புகார் குறித்து எழுத்தாளர் ஆர்னிகா நாசர் கூறுகையில், எனது "ரோபாட்" தொழிற்சாலை கதையின் பிரதி, என்னிடம் இல்லாததால், சமீபத்தில் பத்திரிகையில் விளம்பரம் வெளியிட்டேன். இதை அறிந்த கடலூர், சிப்காட் ஊழியர் துரை என்பவர், பிரதியை எனக்கு வழங்கினார். என் கதையை, இயக்குநர் ஷங்கர் படமாக எடுத்துள்ளது குறித்து பொலிஸில் புகார் அளித்துள்ளேன். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன், 50 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு, சிவில் வழக்கும் தொடர உள்ளேன் என்றார்.




# அதிரடியாய் அருவாள் தூக்கும் தனுஷ்...

யாரடி நீ மோகினி , குட்டி படங்களைத் தொடர்ந்து தனுஷ்- மித்திரன் ஜவஹர் இணைந்துள்ள மூன்றாவது (ரீமேக்) படமான உத்தம புத்திரன் தீபாவளி திரை வெடியாக வெடிக்கவிருக்கிறது.

உத்தம புத்திரனைத் தொடர்ந்து ஆடுகளம் , சீடன், மாப்பிள்ளை என அடுத்தடுத்து தனது படங்கள் வெளியாகவிருப்பதால் ஏகப்பட்ட குஷியில் இருக்கிறாராம் தனுஷ்.

இதே சந்தோஷத்துடன் இப்போது அருவாள் தூக்கவும் தயாராகிவிட்டார் தனுஷ்.. புலி வருது... புலி வருது... என்ற கதையாக பல மாதங்களாக ஹரியின் அடுத்தப்படத்தில் தனுஷ் நடிக்கப் போகிறார் என்ற செய்தி திரைவட்டாரத்தில் வலம் வந்து கொண்டிருந்தது. இப்போது உண்மையாகவே புலி வரப் போகுதாம். அதுவும் சாதாரண புலி இல்லை. இது வேங்கைப் புலியாம்."

ஹரியின் இயக்கத்தில் தனுஷ் நடிக்கப் போகும் படத்திற்கு வேங்கை என பெயரிட்டுள்ளனர். ஏற்கனவே 'அருவா' என வைத்திருந்த தலைப்புதான் 'வேங்கை'யாக மாறியிருக்கிறதாம்.

படிக்காதவன் படத்திற்கு பின்னர் மீண்டும் இந்தப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடிக்கிறார் தமன்னா. படத்தில் மிகவும் முக்கியமான வேடத்தில் ராஜ்கிரண் நடிக்கிறார். தயாரிப்பு-வெங்கட்ராம ரெட்டியின் விஜயா வாஹினி படநிறுவனம்.

சூர்யாவின் நடிப்பில் 'சிங்கம்' மாக கர்ஜித்து மிகப் பெரிய வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தனுஷ் நடிப்பில் 'வேங்கை'யாக வெற்றி வேட்டையாடப் போகும் ஹரி இந்தப் படத்[illegible]ற்றி,

'கோபக்காரன் அ[illegible]ள் எடுத்தால் தப்பு. காவல்காரன் அரிவாள் எடுத்தால் தப்பு இல்லை' என்பதுதான் 'வேங்கை' படத்தின் கதைக் கரு.



படத்தில் தனுஷுக்கு கிராமத்து கோபக்கார இளைஞன் கதாபாத்திரம். தமன்னா- அழகான கிராமத்து பெண்ணாவாராங்க. வேங்கை சிவகங்கை மாவட்டத்து மக்களின் பாசம், நேசம், கோபத்தை விளக்கும் படமாக இருக்கும். சிவகங்கை பகுதியைச்சார்ந்த கதை என்பதால் படப்பிடிப்பையும் அங்கே யே நடத்தலாம் என்பது தான் திட்டம் என்றார் ஹரி. குறிப்பிட்ட கால செட்டியூலில் படத்தை வேகமாக எடுத்து விரைவில் வெளியிட்டு விடும் இயக்குநர் என்ற பெயர் திரைவட்டாரத்தில் ஹரிக்கு உண்டு. அதனால் 'வேங்கை' அதி விரைவில் திரையில் பாயும் என இப்போதே நம்பலாம்.

# யாழ்ப்பாண மக்கள் பிரபாகரனை தலைவனாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்

இலங்கைத் தமிழின அழித்தொழிப்பு என்பது... இன்னமும் தமிழ் நாட்டில் ஆறாத ரணமே! கடந்த வாரம் சென்னையில்,உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் "தமிழ் எங்கள் உயிரினும் மேலானது"என்ற



காசி ஆனந்தன்

குறுந்தகடு வெளியீட்டு விழாவில்... ஈழத்தமிழ் அனல் வீசியது.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ முதல் பிரதியை வெளியிட, மா.நடராசன் பெற்றுக்கொள்வார் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால்,அவருக்குப் பதிலாக அவரின் அண்ணன் ம.சாமிநாதன் குறுந்தகட்டைப்பெற்றுக்கொண்டார். கல்யாண வீடுகளில் கட்டாயம் இடம்பிடிக்கும் "வாராய்,நீ வாரய்" பாடலைத் தந்த திருச்சி லோகநாதனின் மகன் டி.எல்.மகராசன் இசையமைத்து, மேடையிலேயே இரண்டு பாடல்களையும் பாடி,தமிழ் உணர்வாளர்களை உற்சாகப்படுத் தினார்.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த உலகத் தமிழ்ப்பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன்,

"யாழ்ப்பாணத்தில் தமிழர் களைப் பட்டினிபோட்டுக் கொள்ள சிங்கள அரசு முயன்றது. இதைத் தடுத்து நிறுத்துவது பற்றி தி.க. தலைவர் கி.வீரமணியும் நானும் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞரைச் சந்தித்தோம்.

அவருடன் வைகோவும் எஸ்.எஸ்.தென்னரசும் இருந்தனர். இரண்டு மணி நேரம் மன் றாடினோம். கருணாநிதியோ, "பிரபாகரன் என்னை மதிக்கவில்லை"என்றார்.

"அந்த மக்களுக்காகவாவது நீங்கள் பேசக்கூடாதா?" என்று கேட்டோம். "எல்லாம் ஒன்று

தானே.... அந்த மக்களும் அவரைத் தானே தலைவனாக ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள் "என்றார்.

உடனே,எங்களுடன் வந்திருந்த " விடுதலை" பத்திரிகை மேலாளர் சம்பந்தம், "பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாக தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் போட்டு இருக்கிறீர்களே அதன் தலைவர் யாசர் அராஃபத் உங்களை வந்து எப்போதாவது பார்த்திருக்கிறாரா?" என்றதும்,கலைஞர் கடுமையாக கோப மடைந்தார்.

இலங்கை-இந்திய உடன்பாட்டை ஆதரித்து அறிக்கை கொடுக்குமாறு மறைந்த ஈழத்தலைவர் அமர் தலிங்கத்திடம் கலைஞர் சொன்னரா,இல்லையா? "நீங்கள் எவ்வளவு தியாகம் செய்து வளர்த்திருப்பீர்கள்?உங்களை பின்னுக்குத் தள்ளி விட்டு,அவர் (பிரபாகரன்) தன்னை தலைவன் என பிரகடனம் செய்யப்

# கலைஞர் கருணாநிதி அன்று கூறினார் நெடுமாறனிடம் இன்று உதிர்ந்தது தகவல்

பார்க்கிறார். இந்திய இராணுவம் அங்கு போய்விட்டது.இரண்டு நாட்களில் அவர் கொட்டத்தை ஒடுக்கி, அவரையும் பிடித்து உள்ளே போடுவார்கள். நீங்கள் தைரியமாக ஆதரித்து அறிக்கை கொடுங்கள்... நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று இந்தப் பெரிய மனிதர் சொன்னது உண்மையா, இல்லையா?

"விடுதலைப்புலிகளுக்கு எம்.ஜி.ஆர். கோடிகளைக் கொட்டிக்கொடுத்தார். அதுபோல கலைஞரும் பணம் தருவார்,வாங்க வேண்டும் என்று சில புலித்தம்பி கள் கூறியதும் அவர்களையே பிரபாகரன் அனுப்பி வைத்தார்.


## ஜூனியர் விகடன்

அவர்கள் கலைஞரிடம் ரூ.பத்துக்கோடி கேட்டார்கள். சீற்றமான, கலைஞர் அவர்களை விரட்டி அனுப்பினார்.

எம்.ஜி.ஆர்.கோடிகளைக் கொடுத்த போது இவர் 50 ஆயிரம் தந்து ,விளம்பரம் தேட முயன்றார். அதற்குப்புலிகள் இசையவில்லை என்பதால்,அவர்கள் மீது என்னென்னவோ பழி சுமத்தினார்" என்று பகிர் தகவல்களாக தந்தார் நெடுமாறன்.

அடுத்து வந்த பழ கருப்பையா, "தமிழகக் கவிஞர்கள் பலரும் சோரம் போய்விட்டார்கள்,முதுகு சொறிவதே அவர்கள் முழுநேரத் தொழிலாகி விட்டது. மாறாக, உணர்ச்சிக் கவிஞர் எழுதிய பாடல்கள்,உலகத் தமிழர்களிடம்

வைகோவுடன் நெடுமாறன்



செல்ல வேண்டிய தகுதி படைத்தவை. வைகோவும், நெடுமாறனும் தவிர,வேறு யாரும் வந்து பாராட்டி இருந்தால் இந்த விழா மாசுபட்டுப்போய் இருக்கும்!" என்றார்.

ஏற்புரை ஆற்றிய கவிஞர் காசி ஆனந்தன், "தமிழ் அழிந்து கொண்டு இருக்கிறது. தமிழீழம் பற்றிய எழுச்சி பரவி வரும் நேரத்தில் தமிழை அழிக்க வேண்டும் என எதிரி நினைக்கிறான். இந்த நேரத்தில் இங்கு தமிழில் ஆங்கிலம் கலந்து பேசுவது கூடுதலாகி வருகிறது. தமிழ் மண்ணில் தூய தமிழ் பேசும் தொலைக்காட்சிகளைப் பார்க்க முடியவில்லை. ஓர் அறிவிப்பாளர் ஆங்கிலத்தில், "எனக்கு ஹப்பி. வேணும்" என்கிறார்.

"ஹேப்பினெஸ் " வேணும்னு கூட சொல்லத்தெரியாதா? இன்னொருத்தி, "உங்கள் சில்ரண்ட் எப்படி இருக்கிறாங்க? " என்கிறாள். தமிழ் நாட்டில் மொழியை நித்தமும் கொலை செய்கிறார்கள்,எதற்கு எடுத்தாலும் "சோ " போடுகிறான்... "பட் " போடுகிறான். இந்த ஆங்கில

கலப்பு கலாசாரம் மிக ஆபத்தானது.... " என்றவர்,


"இதுவரை 40 ஆயிரம் விடுதலைப்புலிகள் ஆண்களும் பெண்களும் உயிர்க்கொடை தந்திருக்கிறார்கள். அந்த தியாகம் வீண் போகாது, தமிழீழம் மலர்வது உறுதி.அந்த மண்ணில் விடுதலை நெருப்பு அணைந்து போகாது! " என்றார் ஆவேசமாக!

நிறைவாக மைப்பிடித்த வைகோ, "காசியானந்தன் எழுதிய களத்தில் கேட்கும் கானங்கள், புயல் கால ராகங்கள் ஆகிய ஒலிப்பேழைகளில் உள்ளதைப் போன்ற தமிழீழ விடுதலை நெருப்புப்பாடல்கள் இன்னும் நிறைய வரவேண்டும். அவற்றை தமிழக மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதில் நெடுமாறன் தலைமையில் நான் பங்காற்றுவேன்.

அண்மையில் ,என்னை புலம்பெயர்ந்த தமிழர்கள் பேச வரும் படி அழைத்தனர். நான் போகப்போவதில்லை.அந்த வேலையை தமிழகத்திலேயே செய்யப்போகிறேன் 'நிறைவாக இருக்கும் வரை மறைவாக இரு' என்ற காசி ஆனந்தனின் வரிகள் பிரபாகரனுக்கும் பொருந்தும்!" என்றதும்,அந்த விசில் ஒலி அடங்க சில நிமிடங்கள் நீடித்தன.

உடனே வைகோ, "இந்த விசில் சத்தம் தமிழகம் முழுவதும் கேட்கவேண்டும்... " என்று கேட்டுக்கொண்டது மொத்த சத்தத்தையும் மீறி ஒலித்தது. "

இரா. தமிழ்க்கனல்



பொ.ஐங்கரநேசனின் ஏழாவது ஊழிநூல் வெளியீட்டு விழா கடந்த 22 ஆம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் வவுனியா மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.அச்சுதன் நூலை வெளியிட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# விரும்பும் மொழியில் சேவை வழங்கப்படாவிடின் உச்ச நீதிமன்றத்தின் உதவியை நாடமுடியும்

## தேசிய மொழி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் தாம் விரும்பும் ஒரு மொழியில் அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றுவோர் சேவையை வழங்காவிட்டால் அது தொடர்பில் நாட்டுப் பிரஜையொருவர் உச்ச நீதிமன்றின் உதவியை நாட முடியும் என தேசிய மொழி அமைச்சின் மேலதிக செயலாளர் மடுவேகெதர தெரிவித்துள்ளார்.

தமக்கு விரும்பிய மொழியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் சேவையை வழங்கவில்லை என குற்றம் சுமத்தி ஏற்கனவே மூன்று வழக்குகள் உச்ச நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சுற்றுநிருபத்தின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

அரசாங்க சேவைக்குள் பிரவேசிக்கும் அனைவரும் மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டியது அவசியமானதென சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியிலும் , சிங்கள மொழிமூல உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியிலும் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்த வேண்டியது அவசியமானதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டாய பரீட்சையில் சித்தியெய்தும் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே சம்பள உயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# புத்தக கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுநூலகத்தின் அனுசரணையுடன் புத்தக கண்காட் சியும் விற்பனையும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மூன்றாம் திகதி புதன்கிழமை காலை 9 மணி வரை கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக கொக்குவில் இந்துக் கல் லூரி அதிபர் அ. அகிலதாஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

எனவே , பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனை வரும் தவறாது பார்வையிட்டு நூல்களை கழிவுடன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (ஸ்ரீ-2-6)

## ரிஷானாவுக்கு மன்னிப்பு வழங்கக் கோரி

# ஜனாதிபதி கையெழுத்திட்ட கடிதம் சவுதி மன்னரின் அதிகாரிகளிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ரிஷானா நஃபீக்கிற்கு மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி சவுதி அரேபிய மன்னருக்கு எழுதிய கருணை மனு மன்னரின் அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கையெழுத்திட்ட கருணை மனு சவுதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக கருணை மனுவை ஏற்கும் மன்னரின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு விட்டதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பில் சவுதி அரசிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை மூதூரைச் சேர்ந் ரிஷானா நஃபீக் சவுதியில் பணிப்பெண்ணாகத் தொழில் புரிந்த வீட்டு எஜமானரின் கைக்குழந்தையைக் கொன்றதாக குற்றஞ் சாட்டி அவருக்கு சவுதி நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து ரிஷானாவின் மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு பல மனித உரிமை அமைப்புகள் மனுச் செய்திருந்தன.

இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இவற்றை நிராகரித்த சவுதி உயர் நீதிமன்றம் ரிஷானாவுக்கான மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்துள்ளது. இந்நிலையில் ரிஷானா எந்தவேளையிலும் தூக்கிலிடப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே இது விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு ரிஷானாவை மன்னிக்குமாறு சவுதி மன்னருக்கு கருணை மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த மனு இலங்கை யிலுள்ள சவுதி தூதரகத்திற்கும் சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

சவுதியிலுள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகள் மன்னரின் அதிகாரிகளிடம் கையளித்துவிட்டதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# நீதிமன்ற வளாக முன்றலில் எதிர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த மனு உயர் நீதிமன்றத்தால் நேற்று நிராகரிக்கப்பட்டதையடுத்து நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள புதுக்கடைப் பகுதியில் சிலர் ஒன்றுகூடிப் பாதயாத்திரையில் ஈடுபட்டனர்.

பாத யாத்திரையாக வந்த இந்த நபர்கள் நீதிமன்ற வளாகத்திற்குச் செல்லும் வாயிலருகே தேங்காய் உடைத்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# மன்னாரிலும் மீள்குடியேறுவதற்கு சென்றுள்ள சிங்கள குடும்பங்கள்

## காணிகள் வழங்கப்படவில்லையென முறைப்பாடு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் சிங்களக் குடும்பங்கள் மீள்குடியேறுவதற்கு காணிகள் வழங்கப்படவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் பிரதேசத்திற்கு சென்றுள்ள சிங்கள குடும்பங்களுக்கு இதுவரையில் மீள்குடியேற்றுவதற்கு பொருத்தமான காணிகள் வழங்கப்படவில்லை எனவும் யுத்தத்திற்கு முன்னர் குறித்த பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்கள் தற்போது நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாவும் இடம்பெயர்ந்து வாழும் நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக சுமார்25 குடும்பங்கள் அநுராதரபுத்திற்கு இடம்பெயர்ந்ததாக குணபால என்ற நபர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் அமைதியான சூழ்நிலையினால் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு தாம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவிடம் தமது நிலைமைகளை விளக்கியதாகவும் உரிய அதிகாரிகள் தமக்கு காணிகளை வழங்குவதற்கு ஆர்வம் காட்டுவதில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இடம்பெயர் சிங்கள குடும்பங்களினது உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால் அதிகளவு காணிகள் மீள்குடியேறுவதற்கு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கரையோரப் பகுதிகளை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு படைமுகாம்கள் அமைக்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் கரையோரப் பகுதி களைப் பாதுகாப்பதற்காக கற்பிட்டி , பூநகரி , ஒலுவில் , திருகோண மலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் கரையோரப் பாதுகாப்புப் படைமுகாம்களை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவற்றில், ஒலுவில் மற்றும் கற்பிட்டி முகாம்கள் விரைவில் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

முக்கியமாக , கற்பிட்டி கரையோரத்தில் உள்ள பவளப் பாறைகளைப் பாதுகாக்கும் தேவையிருக்கிறது. அதேவேளை ஒலுவில் பிரதேசத்தில் கரையோரப் பாதுகாப்பு முகாம் இல்லாததால், பல்வேறு கடத்தல் சம்பவங்களை முறியடிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது எனவும் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்திடம் 5 ரோந்துப் படகுகள் இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
# 2011 ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2011.01.01 தொடக்கம் 2011.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :-2010.11.11 பி.ப. 1.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :-2010.11.12 பி.ப. 12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி :-2010.11.12 பி.ப 2.00 மணிவரை

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் (NBT, VAT தவிர) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (NBT, VAT தவிர) | மாதாந்த வாடகை (NBT, VAT தவிர்ந்த) |
|---|---|---|---|---|---|
| | **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச்சந்தை | 1000.00 | 10000.00 | 1050000.00 | |
| 2 | மானிப்பாய் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 242000.00 | 400.00 |
| 3 | மானிப்பாய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 62000.00 | 300.00 |
| 4 | மானிப்பாய் சந்தை கோழி இறைச்சிக் கடை | 1000.00 | 5000.00 | 198000.00 | |
| | **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1 | காக்கைதீவு பொதுச் சந்தை | 500.00 | 1500.00 | 58000.00 | |
| 2 | நவாலி பிரசாத் சந்தை | 1000.00 | 5000.00 | 253000.00 | |
| 3 | சாவற்கட்டு சந்தை | 1000.00 | 5000.00 | 199000.00 | |
| 4 | சண்டிலிப்பாய் சந்தை | 500.00 | 1500.00 | 36000.00 | |
| 5 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 90000.00 | 400.00 |
| 6 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 30000.00 | 300.00 |
| 7 | நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 15000.00 | |
| 8 | ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 218000.00 | |
| 9 | ஆனைக்கோட்டைசந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 55000.00 | |
| | **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மரக்கறி) | 1000.00 | 10000.00 | 355000.00 | |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மீன்) | 1000.00 | 15000.00 | 1125000.00 | |
| 3 | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 1500.00 | 16500.00 | |
| 4 | பண்டத்தரிப்பு சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 35000.00 | 600.00 |
| 5 | பண்டத்தரிப்பு கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 30000.00 | 600.00 |
| 6 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| 7 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| | **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1 | மாசியப்பிட்டி சந்தை | 500.00 | 2000.00 | 120000.00 | |
| 2 | இளவாலை பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 272000.00 | |
| 3 | மாதகல் பொதுச்சந்தை | 500.00 | 1500.00 | 95000.00 | |
| 4 | மாசியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 45000.00 | 250.00 |
| 5 | மாசியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 6200.00 | 250.00 |
| 6 | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 20000.00 | 250.00 |
| 7 | மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |
| 8 | இளவாலை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 2000.00 | 100000.00 | |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளை "செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.
4. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. இறைச்சிக்கடைகளுக்கு மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.
6. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு அவற்றின் பெறுமதியின் தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) 3%, 12% (VAT) பெறுமதிசேர் வரி செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையில் 1/3 பகுதியை 2010.11.23 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. மானிப்பாய் பொதுச்சந்தை, பண்டத்தரிப்பு பொதுச்சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா. 150000.00 இற்கும் ரூபா 75000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**தலைமையலுவலகம்,**
**மானிப்பாய்.**
**2010.10.29**

**திருமதி பு.சிவலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(C-1522)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/வேலணை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் பொன். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியும் கொழும்பு பல்கலைக்கழக பொது மற்றும் சட்டத் துறை தலைவருமான வி.ஜே. தமிழ்மாறன் கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ)

## சர்வதேச சிறுவர் முதியோர் தினவிழா

வடமாராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சர்வ தேச சிறுவர், முதியோர் தினவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அர சாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மருதங்கேணி இளைப்பாறிய உதவி அர சாங்க அதிபர் வே. வீரபத்திரபிள்ளை , சிறப்பு விருந்தினர்களாக யாழ். கரித்தாஸ் -கியூடெக் நிறுவன பணிப்பாளர் அருட்தந்தை ஜெ. எக்ஸ்பேர்னாட் றெக்னோ , மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க. பொன்னையா , வட மராட்சி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளர் மற்றும் யாழ். அம்பன் அ.மி.த.க. பாடசாலை அதிபர் பொ. சிவராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (ஸ்ரீ-2)

## உணவுப் பொருட்களின் விலைகள் அமெரிக்காவை விட அதிகம்

### ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் விற்பனை செய்யப்படும் சில உணவுப் பொருள்களின் விலைகள் அமெரிக்காவில் நிலவும் விலைகளை விட அதிகம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் தற்போது மந்த போஷணை 30 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டுவரும் கிராம சுற்றுலா நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வு ஹொரன பிரதேசத்தில் இடம்பெற்ற போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

உணவைப் பெற்றுக் கொடுக்க முடியாத சில பெற்றோர்கள் தமது சிறார்களை பராமரிப்பு நிலையங்களுக்கு ஒப்படைக்க நீதிமன்ற அனுமதியைக் கோரி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில்மனித வாழ்வாதாரத்தை கொண்டு செயற்பட முடியாததன்மை தோன்றியுள்ளதாகவும் கரு ஜெசூரிய தெரிவித்துள்ளார்.

மூன்று வேளையும் தகுந்த உணவு கிடைக்காத நிலையில் நாட்டில் பல குடும்பங்கள் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# காவிரிப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாத பட்சத்தில் கருணாநிதி பதவிவிலக வேண்டும்

## ஜெயலலிதா வேண்டுகோள்



(சென்னை)

தமிழகத்துக்கு காவிரியில் இருந்து தண்ணீர் திறந்துவிடமாட்டோம் என கர்நாடக மாநில அமைச்சர் துணிவுடன் பேட்டியளிக்கும்போது, முதல்வர் கருணாநிதி பயப்படுவது ஏன் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத பட்சத்தில், முதல்வர் கருணாநிதி பதவி விலக வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை,

“கர்நாடக அரசு தமிழகத்திற்கு காவிரியிலிருந்து தண்ணீர் விடமாட்டோம் என்று சொல்லியிருக்கிறதே என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, “பத்திரிகைகளிலே வரும் செய்திகளினால் - நான் சொல்கிற பதில்களினால் - இரண்டு மாநிலங்களுக்கும் இடையிலே தேவையற்ற கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு நான் இடம் தர விரும்பவில்லை” என்று முதல்வர் கருணாநிதி பதில் அளித்திருக்கிறார்.

கர்நாடக மாநில அமைச்சர், இரு மாநிலங்களுக்கு இடையிலான உறவு பாதிக்கும் அளவில் துணிந்து பேட்டி அளிக்கும்போது, கருணாநிதி மட்டும் ஏன் பயப்படுகிறார்?

காவிரிப் பிரச்சினை என்பது தமிழகத்தின் உயிர்நாடி. இதுகுறித்து நிகழ்வுகளை எல்லாம் முன்கூட்டியே தெரிந்து, அதற்கேற்றாற் போல் நடவடிக்கை எடுக்க வேண்டிய முதல்வர், “நீங்கள் சொல்கிற செய்திகளையெல்லாம் நான் பத்திரிகைகளிலேயே பார்க்கவில்லை பார்த்த பிறகு சொல்கிறேன்'' என்று கூறியிருப்பது சரியல்ல.

இதிலிருந்தே காவிரி பிரச்சினையில் கருணாநிதிக்கு உள்ள அக்கறையை தமிழக மக்கள் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

தமிழகத்தின் நலன் காக்கும் ஒரு பொறுப்புள்ள முதல்வராக இருந்தால், உடனடியாக பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து காவிரி நீரை தமிழகத்திற்கு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைச் செய்யாமல், நேரடியாகவே இது குறித்துச் சொல்லியிருக்கிறோம் என்று கருணாநிதி சொல்வது தமிழகத்தின் நலனில் அவருக்கு அக்கறை இல்லை என்பதைத் தான் எடுத்துக்காட்டுகிறது.

1998 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆதரவுடன் பாரதிய ஜனதா தலைமையிலான ஆட்சி மத்தியில் நடைபெற்று வந்தபோது காவிரி நதிநீர் ஆணையம் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை செயல்படுத்தும் வகையில் அதிகாரமுள்ள காவிரி நதிநீர் ஆணைய்யத்தை அமைக்குமாறு நான் மத்திய அரசை பல முறை வலியுறுத்தினேன். இருப்பினும், அதை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை.

இதனையடுத்து ,மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் வாபஸ் பெற்றுக்கொண்டது. ஆனால் கருணாநிதியோ,தமிழர்களின் கோரிக்கையை புறக்கணித்து அந்த அரசுடன் ஒட்டிக் கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு கடந்த 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்த இறுதித் தீர்ப்பு வெளிவந்தவுடன் இருமுறை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார் கருணாநிதி.

இந்தக் கூட்டங்களில், இறுதித் தீர்ப்பினை உடனடியாக மத்திய அரசிதழில் வெளிவரச் செய்து, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை எவ்வித காலதாமமும் இன்றி நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அ.தி.மு.க. கழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இதுகுறித்து எந்தவித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. எனவே, சாக்குப் போக்குச் சொல்லி நழுவாமல், தமிழகத்திற்கு காவிரி நீரைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை முதல்வர் கருணாநிதி உடனடியாக எடுக்க வேண்டும்.

காவிரி நீர் என்பது கர்நாடக மாநிலத்திற்கு மட்டும் சொந்தமானது அல்ல என்பதையும்,1892 மற்றும் 1924 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் படி, தமிழகத்திற்கு காவிரிநதியில் இருக்கக் கூடிய அதிகாரபூர்வ உரிமை கர்நாடக மாநிலத்தாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதையும் கர்நாடக அரசு உணர்ந்து அதன்படி நடக்கவேண்டும் . இதற்கு மாறாக நடக்கும் பட்சத்தில், காவிரியில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை கர்நாடக அரசுக்கு கருணாநிதி உணர்த்த வேண்டும்.

இதுமட்டுமல்லாமல், உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு சமமான காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை உடனடியாக மத்திய அரசு தமிழில் வெளியிடவும், இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு மாதமும் காவிரி தண்ணீரை கர்நாடகம் திறந்து விடுவதை உறுதிசெய்யக் கூடிய அதிகாரி களை உள்ளடக்கிய அதிகாரமுள்ள காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறுதித் தீர்ப்புக் குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்ற வாதம் வைக்கப்படுமேயானால் இடைக் காலத் தீர்ப்பின் படி தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசு மறுக்குமேயனால் கர்நாடகத்தில் உள்ள அணைகளின் மதகுகளை தங்கள் கட்டுப்பாட்டுக் குள் எடுத்துக்கொள்ளக்கூடிய அதிகாரத்தை காவிரி மேலாண்மை குழுவுக்கோ அல்லது காவிரி நதிநீர் ஆணையத்திற்கோ வழங்க மத்திய அரசை கருணாநிதி வலியுறுத்த வேண்டும்.

காவிரியில் தண்ணீர் திறந்துவிடாததன் காரணமாக பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட இருக்கிற தமிழக விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை கர்நாடக அரசிடமிருந்து பெற்றுத் தரவும் கர்நாடக அரசு வழங்கவில்லை என்றால் கருணாநிதி விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை வழங்கவேண்டும் என்றும் தமிழக விவசாயிகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரியில் இருந்து தண்ணீரைப் பெற முடியாத பட்சத்தில் அதற்கு தார்மீகப் பொறுப்பேற்று கருணாநிதி தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஒபாமாவின் இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

## இடதுசாரிக் கட்சிகள் அறிவிப்பு

(டில்லி)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்திய வருகைக்கு கண்டனம் தெரிவிதது எதிர்வரும் 8ஆம் திகதி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக இடதுசாரிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

நான்கு நாட்கள் பயணமாக எதிர்வரும் 6ஆம்திகதி இந்தியா வரவிருக்கும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, மும்பையில் சிறுவர் சிறுமிகளுடன் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடவுள்ளார். அதன்பின் மும்பை மற்றும் டில்லியில் பல்வேறு நிகழ்ச்சிக ளில் கலந்துகொள்ளும் அவர் எதிர்வரும் 8 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

இந்நிலையில்,ஒபாமாவின் வருகைக்கு தற்போது இடதுசாரி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மேலும் அவரது வருகைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றும் அன்றைய நாளில், நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்கா பின்பற்றும் கொள்கைகள் பல நாடுகளின் இறையாண்மைக்கும்,மக்களுக்கும் விரோதமாக உள்ளதாகவும், இந்தியாவைப் பொறுத்தவரையில் அந்நாட்டுடைய பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவிற்கு நெருக்கடி தருபவைகளாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனால், அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, போபால் விஷவாயு கசிவால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிதி வழங்குவதில், இந்தி யாவின் கொள்கைகளில் தலையிட்டு அமெரிக்காவின் கொள்கைகளை திணிப்பதை உடனடியாக நிறுத்தவும் வலியுறுத்தப் போவதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்



# இந்தியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் அணுசக்தி ஒப்பந்தம்

(ஹனோய்)

தென்கொரியா இடையே அணுசக்தி ஒப்பந்தம் நிறைவு பெற்றுவிட்டதாகவும் கையெழுத்திற்காக காத்திருப்பதாக இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

வியட்நாமின் ஹனாய் நகரில் 17 ஆவது ஆசியான் உச்சிமாநாடு நடைபெற்று வருகிறது. இதில் பிரதமர் மன்மோகன் சிங், தென்கொரிய ஜனாதிபதி லீமையூங் பெக் ஆகியோர் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் இணக்கமான சூழ்நிலைகள் குறித்து விவாதித்தனர்.

இரு தலைவர்களையும் சந்தித்ததன் பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனன் கூறியதாவது,

இந்தாண்டு ஜனவரி மாதம் இந்தியாவில் குடியரசு தினத்தன்று சிறப்பு விருந்தினராகக் கலந்கொண்டார் தென்கொரிய ஜனாதிபதி லீமையூங்பெக். அப்போது இரு நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பு மட்டுமன்றி, உள்நாட்டு விமான போக்குவரத்து, விண்வெளி உள்ளிட்ட பன்முகத் துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

தற்போது இருநாடுகளிடையே பாதுகாப்புத் தொடர்பான அணுசக்தி ஒப்பந்தங்கள் இறுதி வடிவம் பெற்று கையெழுத்திற்காக காத்திருக்கிறது.

மேலும் அடுத்த மாதம் 11 ஆம் திகதி தென்கொரியாவில் நடைபெறவுள்ள ஜி -20 மாநாட்டில் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அப்போது இருநாடுகளின் உறவுகளின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். ஒரிசா மாநிலத்தில் அமையவுள்ள 12 பில்லியன் டொலர் மதிப்பிலான போஸ்கோ தொழிற்சாலை குறித்துப் பேச்சுவார்த்தையில் இடம்பெறவில்லை. (ஸ்ரீ-2)

சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன் பெரிய விஷயத்திலும் தொடருவான். ~ இயேசுநாதர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எடுக்கப்பட்ட முடிபு பாராட்டுக்குரியது

யாழ்.பொது நூலகத்திற்குள் தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருபவர்களை பார்வையிடுவதற்கு அனுமதிப்பதில்லை என எடுக்கப்பட்ட முடிபு பாராட்டப்பட வேண்டியதாகும்.

யாழ்.பொது நூலகத்திற்குள் தென்பகுதி உல்லாசப்பயணிகள் நுழைந்து பார்வையிடுவதனால் யாழ்.பொது நூலகத்தின் அங்கத்தவர்களும் பணியாளர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதுபற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், யாழ்.பொது நூலகத்தை பார்வையிடுவதற்காக தென்பகுதிப் பயணிகள் செய்த அட்டகாசம், நியாயம் பிறப்பதற்கு வழிவகுத்தது.

அதனடிப்படையில், அங்கத்துவமில்லாதவர்கள் யாழ்.பொது நூலகத்துக்குள் நுழையமுடியாது என்ற இறுக்கமான கட்டுப்பாட்டை கொழும்பு நிர்வாகம் எடுத்துள்ளது.

உண்மையில் இந்த முடிபு பாராட்டப்பட வேண்டும்.

சட்டமென்றால் அது எங்கும் எவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். இனத்துவ அடிப்படையில் சட்டங்கள் வலுப்பெறுமாயின் நாட்டில் ஒழுங்கு, கட்டுப்பாட்டை எவராலும் பாதுகாக்க முடியாமல் போகும். இந்த ஒழுங்கு தென்பகுதிக்கும் பொருந்தும். வடபகுதியைச் சேர்ந்தவர்கள் தென்பகுதிக்கு சுற்றுலாச் சென்று கொழும்பிலுள்ள நூலகத்தைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டால் அதனையும் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

எதற்கும் ஒரு நடைமுறை உண்டு. இந்த நடைமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டியவை.

எனவே யாழ்.பொது நூலகத்திற்குள் அங்கத்துவமில்லாத எவரையும் அனுமதிக்க முடியாதென்ற முடிபு போல இன்னும் பல முடிபுகளை அரசு எடுக்கவேண்டும். இது இன ஒற்றுமைக்கு ஆரோக்கியமானதாக அமையும்.

இதில் குறிப்பாக இந்து ஆலயங்களுக்கு அண்மையில் ஹோட்டல்கள் நிர்மாணிப்பது, நினைத்த இடங்களில் எல்லாம் புத்தசிலையை பிரதிஷ்டை செய்வது, தமிழ் மக்களின் மனம் நோகும் வகையில் திட்டமிட்ட குடியேற்றங்களை நடைமுறைப்படுத்துவது போன்றவையும் உடனடியாக தடுத்து நிறுத்துவது இன ஒற்றுமைக்கு உரம் கொடுப்பதாக அமையும்.

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனது சேவைகளைப்புரிய தடைகள் இருப்பின் அத்தடைகளை நீக்கி பலமுள்ள நிறுவனமாக மாற்றுவேன் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சுயதொழில்பயனாளிகளுக்கானவாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணிக்கு நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சரியான திசையில் தனது பணிகளை மேற்கொண்டுவருகிறது. இந்நிறுவனத்தின் ஆரம்பகாலத்தில் நானும் உறுப்பினராக இருந்தேன்.

1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்தக்காலகட்டத்தில் ஆயுதங்களை ஏந்துவதைவிட வேறுவழியில்லைஎன்ற சூழ்நிலையில் நான் ஆயுதங்களை ஏந்தினேன். அந்த சூழ்நிலையிலிருந்து மீண்டும் உங்கள் முன்னிலையில் உரையாடுவேன் என நான் நினைத்திருக்கவில்லை.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் போன்று புலிகளின் நிறுவனம் ஒன்று இயங்கிவந்ததால் குழப்பம் ஏற்பட்டது. பின்பு அது சரிசெய்யப்பட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனது சேவைகளை தொடர்ந்து வருகிறது.

அதேவேளை யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இன்று பல்வேறு தனியார் நிறுவனங்கள் இயங்கிவருகின்றன ஆனால் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் போன்று பாரிய உதவிகளைப் புரிவதில்லை.

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் முன்னிலை வகிக்கும் நிறுவனம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமே. எனவே இந்நிறுவனம் சேவைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ச-6)

# கொழும்பின் புறநகரில் இளைஞன் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான நவகமுவ பிரதேசத்தில் உள்ள கொறதோட்ட வெலி கென்ன பகுதியில் உள்ள சந்தை ஒன்றில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி தாரிகள் இருவரால் 27 வயது இளைஞர் ஒருவர் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மொபிடல் கம்பனியில் விற்பனையாளராக கடமையாற்றும் எஸ்.நயனபிரிய என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இவரை இடைமறித்து இரு துப்பாக்கித்தாரிகளும் சுட்டனர். காயம் அடைந்த இவர் ஒருவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் இறந்துவிட்டார்.

படுகொலையாளிகள் இன்னமும் அடையாளம் காணப்படவும் இல்லை. கைது செய்யப்படவும் இல்லை. படுகொலையின் நோக்கம் என்ன? என்று தெரியவில்லை.

நவகமுவ பொலிஸ் நிலைய பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளார்கள். (ச-5)

# மேலும் சில ஐ.தே.க உறுப்பினர்கள் அரசுடன் இணையும் சாத்தியம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், ஜனாதிபதி இரண்டாம் தவணைக்கான பதவியேற்பின் பின்னர் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள அதிகம் வாய்ப்பிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அரசதரப்பில் சில முக்கியஸ்தர்கள் அவருடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவரைத்தவிர மேலும் சில ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள தயாராகிவருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் இருந்தோ அல்லது நா டாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தரப்பில் இருந்தோ எந்த விதமான கருத்துக்களும் வெளியாகவில்லை என்பதும், ஏற்கனவே வெளி வந்த இவ்வாறான கருத்துக்களை விஜயகலா மகேஸ்வரன் மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது என அவ்வூடகத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# சக்கேயு இறங்கி வா

துன்பமில்லாத நிலை வேண்டுமானால் எல்லாப் பொருள்களையும் உள்ள காலத்திலேயே துறக்க வேண்டும். துறந்த பின் இங்கு பெறக்கூடும் இன்பங்கள் பல.

ஆம் , ஒன்றைப் பெற வேண்டுமானால் இன்னொன்றைக் கண்டிப்பாக இழக்கத்தான் வேண்டும்.மேலான நன்மைகளைப் பெற கீழான செயல்களைக் கண்டிப்பாக விட்டுத்தான் ஆக வேண்டும். ஒன்றை விடாமல் இன்னொன்றை அடைய முடியாது. இருப்பதையும் விடக்கூடாது; அதே நேரம் இன்னொன்றையும் அடைய வேண்டும் என்பது குழந்தைத் தனம். குழந்தைகள் தான் அறியாமல் கையில் பந்தை வைத்திருந்தாலும் இன்னொன்றையும் வேண்டும் என்று அடம் பிடிக்கும். அதற்குத் தெரியாது எது உயர்ந்த , சிறந்த பொருள் என்று.

- ✱ இளநீர் வேண்டுகின்றவன் மரம் ஏறித்தான் ஆகவேண்டும்;
- ✱ மாடியின் உச்சியில் செல்ல விரும்புகின்றவன் ஏணிப்படிகளில் ஏறித்தான் ஆக வேண்டும்;
- ✱ சிகரத்தை அடைய விரும்புகின்றவன் மலை ஏறித்தான் ஆக வேண்டும்;

ஆனால் மரத்தையும் , மாடியையும், மலையையும் ஏறியவன் அந்த அனுபவத்தில் நிலைத்திருக்க மீண்டும் அவன் இறங்கி வர வேண்டும்.


இதுதான் இன்றைய நற்செய்தியின் முக்கிய செய்தி. இன்றைய நற்செய்தியிலே இயேசு எரிக்கோவுக்குச் சென்று கொண்டிருக்கிறார்.

அவரைப் பார்க்கப் பெருங்கூட்டம் . அக் கூட்டத்தில் ஒருவகை சக்கேயு. இவன் புறவினத்தான் , பெரும் செல்வந்தன், வரிவசூலிப்பவர்களின் தலைவன். அப்படியென்றால் இவன் எவ்வளவு பெரிய ஏமாற்றுக்காரன், பாவி என்று சொல்லாமலே விளங்கும்.

ஆனால் , இந்தப் பாவியான சக்கேயுவுக்கு இயேசுவைப் பார்க்க

## பரமபிதா காட்டிய பாதை

வேண்டும் என்ற ஆசை ; ஆசைமட்டும் அல்ல அது ஒரு வெறியாகவே இருந்தது. ஓடிச் சென்று காட்டு அத்திமரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அதேவேளையில் இயேசுவைக் கண்டுவிட்டால் மட்டும் போதாது. அவரோடு தோழமை கொள்ள வேண்டும். அவரோடு பந்தியில் அமர வேண்டும். பந்தியில் அமர்வது என்பது தோழமை கொள்வதன் பொருள்தான். இதுதான் இயேசு அனுபவம். இந்த அனுபவத்தைக் கொடுக்கத் தான் இயேசு சக்கேயுவிடம், விரைவாய் இறங்கிவா. இன்று உன வீட்டில் உன வருந்த வேண்டும் என்றார்.



ஆம் , நாமும் ஆணவத்திற்கும், பகைமைக்கும், பொய்மைக்கும் அநீதிக்கும் பிரிவினைக்கும் காரணமாக இருந்திருக்கலாம் அல்லது அவைகளையே உயர்த்திப் பிடித்துக் கொண்டு இருக்கலாம். ஆனால், இது தக்க காலம். அனைத்தையும் விட்டு இறங்கி வர வேண்டும். தயாரா! இறங்க வில்லை என்றால் இயேசுவோடு தோழமை இல்லை. இயேசுவோடு தோழமை இல்லையென்றால் இயேசுவோடு உறவில்லை , பந்தியில் இடம் இல்லை. எனவே சக்கேயுவைப் போன்று விரைவாய் இறங்கி வருவோம். இயேசுவின் தோழமை விருந்திலே பங்கு கொள்வோம்.

ஜோன் ரொபேர்ட்

# நேபாளத்தில் 14 முறைவாக்குப்பதிவு நடந்தும் பிரதமர் தெரிவாகவில்லை

(காத்மண்டு)

நேபாள நாட்டில் 14 முறை வாக்குப்பதிவு நடைபெற்றும் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை.

நேப்பாளத்தில் பிரதமராக இருந்தவர் மாதவ் குமார் நேபாள். மாவோயிஸ்ட் கட்சியினரின் நெருக்குதலால் பிரதமர் பதவியிலிருந்து அவர் விலகினார்.

இந்த நிலையில் கடந்த ஜூன் 30 ஆம் திகதி முதல் பிரதமரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்று வருகிறது.

இதுவரை 13 முறை வாக்குப்பதிவு நடந்தது. ஆனால் பிரதமரைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் நீடித்தது. இதில் யாருக்கும் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை 14 ஆவது முறையாக வாக்குப்பதிவு நடந்தது. பிரதமர் பதவிக்கு நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராம் சந்திர பெட்யால் போட்டியிட்டார்.

வாக்களிப்பில் 138 பேர் மட்டுமே வாக்களித்தனர். இதில் 96 பேர் பெட்யாலுக்கு ஆதரவாக வாக்களித்தனர். 2 பேர் அவருக்கு எதிராக வாக்குகளை செலுத்தினர். எஞ்சியுள்ள 40 பேரும் யாருக்கும் வாக்களிக்காமல் நடுநிலையாக இருந்தனர்.

இதனால் 14 ஆவது முறையாக வாக்குப்பதிவு நடந்தும் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. பிரதமரை தேர்ந்தெடுக்கும் அடுத்த தேர்தல் நவம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ளதாக தெரியவந்துள்ளது.

564 உறுப்பினர்களைக் கொண்டது நேபாள நாடாளுமன்றம். இதில் 301 உறுப்பினர்கள் வாக்குப் போட்டு ஏக மனதாக தேர்ந்தெடுப்பவர் தான் பிரதமராக முடியும். (ஸ்ரீ-2)



பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதரக நியமிக்கப்பட்டுள்ள கமரூன் மெண்டர் (நடுவில்), கராச்சி நகரில் உள்ள பாகிஸ்தான் நிறுவுனர் முகமது அலி ஜின்னாவின் நினைவிடத்தில் தனது மனைவியுடன் அஞ்சலி செலுத்தினார்.

# இங்கிலாந்திலும் தாக்குதல் நடத்த அல்-கொய்தா அமைப்பு திட்டம்

(லண்டன்)

மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதல் போன்று இங்கிலாந்திலும் தாக்குதல் நடத்தி பலரை பிணைக்கைதிகளாக பிடிக்க அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு திட்டம் தீட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஒசாமா பின்லேடனின் நெருங்கிய கூட்டாளியாக கருதப்படும். ஆப்கானில் பயங்கரவாதிகளுக்கு பயிற்சியளித்தவரும் லிபியா நாட்டை சேர்ந்தவருமான நோமன் பெநோட்மேன் ஜெர்மன் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் வர்த்தக மைய கட்டடத்தில் நடத்திய தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முக்கிய குற்றவாளியான காலித் ஷேக் மொமதுவை விடுவிக்க இந்த திட்டம் தீட்டப்பட்டதாக அவர் கூறியுள்ளார். மேலும் இது தொடர்பாக பல ஆலோசனை கூட்டங்கள் நடந்துள்ளதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# அமெ. வழிபாட்டு தலங்களை தகர்ப்பதற்கு தீவிரவாதிகள் சதி

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உள்ள 2 வழிபாட்டு தலங்களுக்கு ஏமன் நாட்டில் இருந்து 2 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த பொதிகள் டுபாய், இங்கிலாந்து நாட்டின் வழியே அமெரிக்கா செல்லக் கூடியது ஆகும். பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகப்பட்டு இங்கிலாந்திலும் டுபாயிலும் அந்த பொதிகளை பிரித்து பார்த்த போது அதில் சக்திவாய்ந்த வெடி குண்டுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டன.

இதேபோல் சவுதி அரேபியாவிலும் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதியை பொலிஸார் பிரித்து பார்த்த போது அதிலும் வெடி குண்டு இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

முன்னதாக வழிபாட்டு தலங்களுக்கு ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது. இதனால் பாதுகாப்பு அதிகாரிகள் உஷாராகி முன் கூட்டியே வெடி குண்டு பொதிகளை கண்டு பிடித்து விட்டனர்.

சிக்காகோ வழிபாட்டு தலங்களை தகர்க்கும் சதித்திட்டத்துடன் இந்த பொதிகளை தீவிரவாதிகள் அனுப்பி இருக்கலாம் என்று தெரிகிறது. இது தொடர்பாக இங்கிலாந்து, டுபாய் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். (ஸ்ரீ-2)

# ரஷ்ய ஏவுகணை சோதனை வெற்றி


(மொஸ்கோ)

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ரஷ்யா நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. அணுகுண்டை தாங்கி செல்லக்கூடிய 8 ஆயிரம் கி.மீ. தூரம் வரை சென்று தாக்கவல்ல புலாவா என்ற கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய ஏவுகணையை ரஷ்யா இரண்டாவது முறையாக வெற்றிகரமாக பரிசோதித்தது.

ஏராளமான தோல்விக்கு பின் தற்போது இந்த ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

ரஷ்யாவின் வடமேற்கு பகுதியில் உள்ள வெள்ளைக்கடலில் நிறுத்தப்பட்டிருந்த திமித்ரி டோன்ஸ்காய் என்ற நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தப்பட்ட புலாவா ஏவுகணை 6 ஆயிரம் கி.மீ தொலைவில் பசுபிக் கடலில் உள்ள கம்சட்கா தீபகற்ப பகுதியில் குரா என்ற இடத்தை சென்று தாக்கியது.

அணுகுண்டை சுமந்து சென்று தாக்கவல்ல இந்த ஏவுகணை இன்னும் சில ஆண்டுகள் கழித்து ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




# 2030 ஆம் ஆண்டுக்குள் செவ்வாயில் மனிதர்களை குடியமர்த்த நாசா திட்டம்

(வோஷிங்டன்)

2030 ஆண்டுக்குள் செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்த அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா ஆய்வு செய்து வருகிறது.

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருப்பதாக ஏற்கனவே பல கண்டுபிடிப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது. எனவே , அங்கு மனிதர்கள் வசிக்க முடியும் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை நிரந்தமாக குடியமர்த்த அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா திட்டமிட்டுள்ளது. சந்திரன் உள்ளிட்ட மற்ற கிரகங்களிலும் மனிதர்களை குடியமர்த்துவது பற்றி நடத்தி வரும் ஆய்வின் ஒரு பகுதியாக இந்த ஆய்வையும் நாசா நடத்தி வருகின்றது.

கலிபோர்னியாவில் உள்ள நாசாவின் முக்கிய ஆராய்ச்சி மையங்களில் ஒன்றான அமிஸ் ஆராய்ச்சி மையம் இந்த ஆய்வை நடத்தி வருகிறது. இது ரூ. 5 ஆயிரத்து 600 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் திட்டமாகும்.

இந்த திட்ட ஆய்வுக்காக நாசா விஞ்ஞானிகளுக்கு ரூ. 41/2 கோடி அரசு மானியம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக கோடீஸ்வரர்களிடம் நிதி உதவி அளிக்குமாறு நாசா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த திட்டப்படி செவ்வாய் கிரகத்தில் வசிக்க தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் விண்வெளி வீரர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள். அவர்களை அனுப்புவதற்கே ரூ 5 ஆயிரத்து 600 கோடி செலவாகும் என்பதால் அவர்களை மீண்டும் பூமிக்கு வரவழைக்கும் திட்டம் இல்லை.

எனவே அவர்கள் செவ்வாய் கிரகத்திலேயே நிரந்தரமாக குடியிருக்க வேண்டி இருக்கும். இத்திட்டப்படி 4 விண்வெளி வீரர்கள் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று எதிர்பபார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சிறைக்கைதி சார்பில் நோபல் பரிசு பெறும் ஆதரவாளர்களுக்கும் வீட்டுக்காவல்

## சீனா அதிரடி நடவடிக்கை

(பீஜிங்)

சீனாவைச் சேர்ந்த லியுசியாபோ என்பவர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார். அவரை விடுதலை செய்யுமாறு உலகத் தலைவர்கள் வற்புறுத்தியும் சீனா மசிய வில்லை. அவர் சார்பில் அவர் மனைவி லியுசியா, நோபல் பரிசை பெறக்கூடும் என்று கருதி அவரை சீனா வீட்டுக் காவலில் வைத்துள்ளது.

இதையடுத்து லியு சியாபோ சார்பில் நோபல் பரிசைப் பெற்றுக்கொள்ள அவருடைய ஆதரவாளர்களும் மனித உரிமை இயக்கத்தினரும் முன் வந்தனர். இந்நிலையில் அவர்களையும் சீன அரசு காவலில் வைத்துள்ளது.

அவர்களின் வீட்டில் கண்காணிப்பு கமராவும் பொருத்தப்பட்டுள்ளது. நோபல் பரிசு விழா முடியும் வரை இந்த அடக்குமுறை தொடரும் என்று கூறப்படுகிறது. (ஸ்ரீ)



ஆசியான் உச்சி மாநாடு வியட்நாமின் ஹனாய் நகரில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ள வந்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அகிஹினோ பெனிகோவை (இடது), ஜப்பான் பிரதமர் நௌட்டோகான் வரவேற்றார்.

# தென்னாபிரிக்க அணி வெற்றி; பாகிஸ்தான் அணி ஏமாற்றம்



ரிசொற்சோபியின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில்பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது. தென்னபிரிக்க-பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 'இருபது-20', 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் 'இருபது-20' தொடரை தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு சபீக், ஹபீஸ், யூனிஸ்கான் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் அசாட் சபீக் 19, மொகமெட் ஹபீஸ் 68, யூனிஸ்கான் 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 34.5 ஓவர்களில் 157 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் அடுத்துவந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் பாகிஸ்தான் அணி 49 ஓவர்களில் 203 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ஹைடர் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் ரிசொற்சோபி 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் லாங்வெல்ட், போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மோனி மோர்கல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 204 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி கலிஸ், டி வில்லியர்ஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 39.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 207 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஜக் கலிஸ் 66 ஓட்டங்களை எடுத்து உபாதை காரணமாக ஆட்டத்திலிருந்து இடைவிலகினார். அத்துடன் டி வில்லியர்ஸ் 51, அம்லா 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சயிட் அஜ்மல் வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த ரிசொற்சோபி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

## பயிற்சி காணாதோ?

முதல் ஒருநாள் போட்டியில் தோல்வியடைந்தது குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி கூறுகையில்,

யுனிஸ்கான் அணிக்குத்திரும்பியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஹபீஸ் அருமையான ஆரம்பம் அமைத்துக் கொடுத்தார். ஆனால் அதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டோம். பந்துவீச்சு, களத்தடுப்பு சிறப்பாக உள்ள நிலையில் துடுப்பாட்டம் மட்டும் சொதப்புகிறது. பயிற்சியில் ஈடுபடும் நேரத்தை அதிகரித்து இத் தவறைச் சரிசெய்வோம் என்றார்.

## கனவு காணுங்கள் சொல்கிறார் சச்சின்

கனவுகள் இல்லாத வாழ்க்கை சுவையற்றது. கனவு காண்பது மிகவும் முக்கியமானது என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் உலகின் சாதனை நாயகனாகத் திகழ்கிறார் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர். ஒருநாள் (17,598), டெஸ்ட் (14,240) என இரண்டிலும் அதிக ஓட்டங்கள் குவித்து முதலிடத்திலுள்ளார். இந்த ஆண்டு இவருக்க சிறப்பானதாக அமைந்துள்ளது.

கடந்த பெப்ரவரியில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சதம், ஒருநாள் போட்டியில் இரட்டைச்சதம், ஐ.பி.எல். தொடரில் அதிக ஓட்டங்கள் மற்றும் இலங்கைக்கு எதிராக இரட்டைச்சதமடித்து அசத்தினார்.

சமீபத்தில் முடிந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில், டெஸ்ட் கிரிக்கெட்டில் 14 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதித்தார். கடந்த 2002 க்குப் பின் மீண்டும் சர்வதேச டெஸ்ட் துடுப்பாட்ட வரிசையில் முதலிடத்தைப் பிடித்தார். ஐ.சி.சியின் சிறந்த வீரர் விருது, இரண்டு ஆசிய விருதுகளை பெற்றார்.

இப்படி அசத்திக்கொண்டிருந்தாலும் இன்னும் சாதிக்கவேண்டியது அதிகமுள்ளது என்கிறார் சச்சின். முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் வழியில் கனவுகள் காணவேண்டும் என்கிறார் சச்சின் டெண்டுல்கர்.

# ஐ.பி.எல். பாணியில் பி.பி.எல். அவுஸ்திரேலியாவில் அறிமுகம்

(மெல்பேர்ன்)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) பாணியில் புதிய இருபது-20 கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை நடத்தவுள்ளது. இதற்கு பிக் பேஷ் லீக் (பி.பி.எல்) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் பங்குகளை வாங்குவதற்கு இந்திய நிறுவனங்கள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) சார்பில் கடந்த 2008ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பு.

இத் தொடர் மூலம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு வருமாணம் கோடிகளில் கொட்டியது.

இதே போன்று ஒரு தொடரை நடத்த அவ்ஸ்திரேலிய கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. அவ் அமைப்புக்கு பிக் பேஷ் லீக் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் நடந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் பி.பி.எல்.லீக் நடக்க உள்ளது.

### மாற்றம் இல்லை

ஐ.பி.எல். தொடருக்கும் பி.பி.எல். லீக்கிற்கும் பெரிய மாற்றம் இல்லை. இதிலும் 8 அணிகள் தான் பங்கேற்க உள்ளன. அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் புளூஸ், விக்டோரியா, குயின்ஸ்லாந்து உள்ளிட்ட 6 உள்நாட்டு அணிகள் மற்றும் புதியதாக 2 வேறு அணிகள் சேர்க்கப்பட உள்ளன. இவை அனைத்துமே அவுஸ்திரேலியாவிலுள்ள முக்கிய நகரங்களை அடிப்படையாகக் கொண்டவை.

### 33 சதவீத பங்கு

ஐ.பி.எல். அணிகளில் உரிமையாளர்கள் மற்றும் பங்குகள் குறித்து சமீபத்தில் பெரும் சர்ச்சை வெடித்தது. இது போன்ற பிரச்சினைகள் வராமலிருக்க அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை முன் எச்சரிக்கையுடன் செயல்பட ஆரம்பித்துள்ளது.

இதனால் பி.பி.எல்.தொடரில் பங்கேற்கும் அணிகளின் 33 சதவீத பங்குகளை மட்டுமே தனியார் நிறுவனங்கள் வாங்க முடியும். மீதமுள்ள பங்குகள் அனைத்தும் அணிகள் தொடர்புடைய மாநில கிரிக்கெட் சங்கங்களுக்குதான் என்ற கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

### கடும் போட்டி


அவுஸ்திரேலிய இருபது-20 அணிகளின் மதிப்பு சுமார் ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது கொச்சி ஐ.பி.எல். அணியின் (ரூபாய் 3ஆயிரத்து 500 கோடி) மதிப்பை விடவும் 3 மடங்கு குறைவுதான்.


இதனால் இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் பிக் பேஷ் லீக் அணிகளின் பங்குகளை வாங்க ஆர்வமாக உள்ளன.

ஏற்கனவே நியூ சவுத் வேல்ஸ் விக்டோரியா அணிகளின் பங்குகளை சுமார் 600 கோடி கொடுத்து இந்திய நிறுவனங்கள் வாங்கி விட்டதாக அவுஸ்திரேலிய மீடியா செய்தி வெளியிட்டுள்ளது.











யாழ்.போதனா வைத்தியசாலையின் 9-வது நோயாளர் விடுதி கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தின் 2 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைத்து வழங்கப்பட்டது. இவ்நோயாளர் விடுதியை திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியநிபுணர் திருமதி உதயகுமார் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ரவி டயர் நாடாவெட்டி திறந்துவைப்பதையும் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பி. ரஜீவன் மங்கல விளக் கேற்றுவதையும் விருந்தினர்களையும் மேலுள்ள படங்களிலும் யாழ்.போதனா வைத்தியசாலையின் உதவிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிறியவானந்தன் நினைவுச்சின்னமொன்றை கொமர்ஷல் வங்கியின் திட்ட அமுலாக்கல் பிரிவு பொது முகாமையாளர் ரிச்சாட் றொட்ரிக்கோவிடம் கையளிப்பதை மூன்றாவது படத்திலும் வங்கியின் தன்னியக்க பணப்பரிமாற்றப்பிரிவின் பிரதம முகாமையாளர் நோயாளர்களுக்கு புரோட்டினைஸ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## பொதுமக்...

வர்களை அரசாங்கம் ஒடுக்குவதாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

28 மாணவர்கள் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் நாடுமுழுவதும் 200க்கும் அதிகமான மாணவர்கள் வகுப்புத் தடைக்குள்ளாகியிருப்பதாகவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் உதுல் பிரேமரட்ண உட்பட கைது செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் விடுதலைசெய்யுமாறு ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது. (ச-5)

# நுரைச்சோலையில் சீனர்கள் கைகலப்பு ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

(கொழும்பு)

நுரைச்சோலை மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த சீனர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டதில் ஒருவர் காயங்களுடன் புத்தளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் மின் ஒழுக்குக் காரணமான ஏற்பட்ட தீ விபத்தினால் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது தொடர்பில் நுரைச்சோலை அனல் மின் நிலையம் தொடர்பான பரபரப்பு இன்னும் நீங்காத நிலையில் சீனர்களின் குறித்த மோதல் நடைபெற்றுள்ளது.

மோதலுக்கான காரணம் என்னவென்று இன்னமும் தெரியவில்லை.

ஆயினும் இலங்கையில் சீனா மேற்கொள்ளும் நிர்மாணப் பணிகளில் சீனாவின் சிறைச்சாலைக் கைதிகள் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் மூர்க்கத்தனமான கிரிமினல் குற்றவாளிகள் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதைப்போல குறித்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (ச-5)

## வடக்கில்...

பிரதேசங்களில் கடமையாற்
சாங்க அதிகாரிகள் அறிவிக்க
யுள்ளனர்.

இவ்வாறு காணியுறுதிக
கப்பட்ட பிரதேச காணிகளை
ழந்த விடுதலைப்புலி உறு
களின் குடும்பங்களுக்கு வழ
டுள்ளது. விடுதலைப்புலி
ஆதரவளித்த சில வர்த்தக
கும் காணிகள் வழங்கப்பட்டு

அண்மையில் வெளிநா
தங்கியிருந்த சில யாழ்ப்பாண
ழர்கள் நாடு திரும்பி தமது க
தொடர்பில் விசாரித்தபோது
தகவல்கள் வெளியாகியுள்ள
அதில் தெரிவிக்கப்பட்டுள்ள

## ஐ.நா. சபை நிபுணர்கள் குழு...

எந்தத் தரப்பினராலும் நல்ல யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டால் அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டாது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் நல்ல யோசனைகள் முன்வைக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது;

வெளிநாட்டுச் சக்திகளால் மேற்கொள்ளப்படும் எந்தவிதமான விசாரணைகளையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லைஎன அரசு ஏற்கெனவே திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு விசாரணை நடத்தவில்லை.

தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது என பான் கீ மூன் பல சந்தர்ப்பங்களில் எனக்கு அறிவித்துள்ளார்.

உலகின் அனைத்து நாடுகளிலும் ராஜதந்திர சேவையில் அரசியல் தலையீடு காணப்படுகின்றது.

இலங்கையிலும் அவ்வாறான நிலைமைகள் காணப்படுவதனை மறுப்பதற்கில்லை.

பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சமஷ்டி ஆட்சி முறைமை குறித்து தாம் வலியுறுத்திய போதிலும் தற்போது நிலைமைகள் மாறியுள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனால் பல ஆண்டுகளுக்கு முன்னர் அதே நிலைப்பாட்டை தற்போது ஒப்புநோக்குவது பொருத்தமாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வே அரசாங்கத்துடன்ான உறவுகளை துண்டிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

சமாதான முனைப்புக்களுக்கு முன்னதாகவே இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் தொடர்புகள் காணப்பட்டன.

பொருளாதார ரீதியில் இரு நாடுகளுக்குமிடையில்நெருங்கியபிணைப்புக் காணப்பட்டது இலங்கையின் தென்பகுதி அபிவிருத்திப் பணிகளில் நோர்வே அரசாங்கம் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

இதனை எவரும் மறந்துவிடக் கூடாது.பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் ஜனாதிபதி பிரதம அதிதியாக அழைக்கப்பட்டமையினால் சீனாவுடனான உறவுகளில் விரிசல் ஏற்படாது.

இலங்கையின் நிலைமைகள் குறித்து வெளிநாடுகளில் போதிய அளவு தெளிவுப்படுத்தப்படவில்லை எனவும் எதிர்காலத்தில் தூதுவராலயங்களின் ஊடாக அதிகளவு தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## பராக் ஒபாமாவுக்கு...

தமிழருக்கு ஆதரவளிக்கக் கூடும் என எதிர்பார்க்க முடியாதென அமெரிக்கத் தமிழர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க அரசாங்கம் இலங்கையின் மீது கவனம் செலுத்தி வருவதாக அமெரிக்கத் தமிழர் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது சூடானில் அமெரிக்கா

மேற்கொண்டுவரும் நட
களைப் போன்றே இலங்
நடவடிக்கைகள் மேற்கொ
தாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் பரா
வின் மனித உரிமை விவ
குறித்து திருப்தி அடைய
தெனத் தெரிவித்துள்ளார்

## நாட்டை முன்னேற்ற...

பேச்சாளரும், உதவிச் செயலாளருமான பிலிப் ஜே குரோவ்லி நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் வைத்து மேற்குறித்தவாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதாக பல்வேறு தரப்புகளாலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு கொண்டிருக்கும் சூழ்நிலையில், அது தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதிலும் அனைத்துத்தரப்பினருக்குமிடையிலான முரண்பாடுகளைக் களைவது தொடர்பிலும் அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டுமென அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் மூலம் மாபெரும் மக்கள் பலமொன்றைப் பெற்றுக்கொண்டுள்ள அரசாங்கம் அனைத்து இன மக்களிடையேயும், இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளை முடுக்கி விட்டு, எல்லா மக்களினதும் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு செயற்படும் போதுதான் சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

இலங்கையின் எதிர்காலத்திற்கு அது மிக முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)


**புலமைப் பரிசில் -2011**

தரம் 4 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை-01

ஆரம்பம்: 31.10.2010 [ஞாயிறு]

காலை 8.00/9.00/10.00, மாலை 2.00/3.00/4.00

❁ விரும்பிய எந்நேரத்திலும் பரீட்சைக்கு தோற்றலாம்.

❁ அனுமதிகளை இன்று முதல் பதிவு செய்யவும்

**நாவலர்** கல்வி நிலையம்

ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம். (அ-1517)


## நல்லூரில்...

திருக்கும் நிலையில் 400 மில். ரூபாய் செலவில் நட்சத்திர விடுதி அமைப்பது முக்கியமானதொன்றல்லபோன்ற கருத்துக்கள் பூதாகாரமாக எழும்பியதையடுத்து ஹோட்டல் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

எனினும்தற்போது அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)


**உடனடியே...**

❐ IELTS

❐ Spoken English

ஆரம்பமாகிறது பிரிவு I -(05.11.20
பிரிவு II -(06.11.2

❖ குறைந்த கட்டணம்

❖ பல்கலைக்கழக விரிவுரையாளர்களை
ஆசிரியராகக் கொண்ட ஆசிரியர் கு

❖ பல்கலைக்கழக மாணவர்களுக்காக
பல்கலைக்கழகம் தவிர்ந்த வேறு மாணவர்க
காகவும் வகுப்புகள் ஒதுக்கப்பட்டுள்

❖ பயிற்சிநெறி முடிவில் விரும்பியோரு
வெளிநாட்டு (UK) பல்கலைக்கழக அனு
போன்றன பெற்றுத் தரப்படும்...

❁ அனுமதிகள் 1-ம் திகதியில் இருந்து வழங்கப்

❁ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு:

European College of higher Stu
315 1/2, Parameshwara Junction,
Tel.No.: 0771882507 ;02137347

**CCNA,IELTS / TOEFL,A+,N+,BCS-UK,ICDL Course fee Free for Computer Engineering**

Schol. From States * More career option * Competitive salary * Senior IT management position
* International job opportunities * Msc admission from USA,UK universities

MCS Supported By UNDP/JRRP

324,Palaly Road,Parameswara Junction

SMS your name & course to 772 395 895 & Get Schol.

Closing Date 03.11.2010

**இறைச்சிக் கோ
விற்பனை**

எம்மிடம் புறொயிலர்,
இறைச்சிக் கோழிகள் மொத்
சில்லறையாகவும்,தினமு
செய்து பெற்றுக் கொள்ள

ஒவ்வொரு செவ்வாய
களிலும்,30 நாட்களில் 2
வளரக்கூடிய (பகிரா) புறொ
களும் பதிவு செய்வதன் மூ
றுக் கொள்ளலாம்.

வலி-தென் மேற்கு கால்நடை
கூட்டுறவுச் சங்கம்
சண்டிலிப்பாய். 021 32

**வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை
தீபாவளிப் பண்டிகை விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்**

ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை

கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்

DHL WORLDWIDE EXPRESS

➤ TCN Express
No-2B,Nelson Place, Colombo-6

திருமுருகன் கொம் ஹற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

➤ இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. ➤ பிரதான வீதி, நெல்லியடி.
➤ இல-6.திருநகர் பிரதான வீதி ,கிளிநொச்சி. ➤ 4, மில் றோட் ,வவுனியா.

**ஆள் தேவை**

Play Group நேசரி
கின்ற சிறுபிள்ளைக்கு
3.00 மணி தொடக்கம் 7
பாடம் சொல்லிக்கொடுப்
பொழுதைக் கழிப்பதற்கு
தேவை.வலிகாமம் மேற்கு
யில் வசிப்பவர்கள் விரும்பு
தொடர்புகளுக்கு
TP.:07760287


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2010 இல் அச்சிட்டு வெளியி